Registered as Newspaper

# உதயன்

பக்கங்கள் - 16 | விலை - 30 ரூபா    செய்தி: 021 493 0000    விளம்பரம்: 021 493 1111

சுடர் :35    கதிர் :166   சித்திரை 28ஆம் நாள் திங்கட்கிழமை || மே 2020   வள்ளுவர் ஆண்டு 2051

## எவருக்கும் தொற்றில்லை

யாழ்ப்பாணம், மே 11
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை ஆய்வு கூடத்தில் 27 பேருக்கான சோதனைகள் நேற்று முன்னெடுக்கப்பட்டன. இதில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்று பரிசோதனை முடிவுகள் வெளிவந்துள்ளன.
யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை விடுதிகளில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்ட 2பேர், வவுனியா பொது மருத்துவமனையிலிருந்து 3 பேர், கோப்பாய் பாதுகாப்புப் பிரிவினர் 2 பேர், பெரியகாடு தனி 02 >

# இலங்கையில் இன்றுமுதல் மீண்டும் இயல்பு வாழ்வு!

### கொழும்பு, கம்பஹாவில் தொடர்ந்தும் ஊரடங்கு

கொழும்பு, மே 11
நாடு முழுதும் இன்றுமுதல் ஊரடங்குச் சட்டம் தளர்வுநிலைக்குக் கொண்டுவரப்பட்டு, இயல்புவாழ்வு நிலையை ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. ஆயினும் கொழும்பு மற்றும் கம்பஹா ஆகிய இரு மாவட்டங்களிலும் ஊர 02 >

## கொரோனா




# 856


கொழும்பு, மே 11
இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான மேலும் 9 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய கொரோனா தொற்றியவர்களின் மொத்த எண்ணிக்கை 847இலிருந்து 856 ஆக அதிகரித்துள்ளது.
நேற்று புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ள 9 பேரில் 7 பேர் கடற்படையைச் சேர்ந்தவர்கள் எனவும், ஏனைய 2 பேரும் அண்மையில் டுபாயிலிருந்து நாடு திரும்பிய நிலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர்நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார். இதேவேளை, கொரோனாத் தொற்றுக்குள்ளான 02 >

## டிப்பர்–ராணுவ வாகனம் விபத்து

*4 படையினர் காயம்*

முகமாலை, மே 11
இராணுவ வாகனமும் டிப்பர் வாகனமும் மோதி விபத்துக்குள்ளாகியதில் 4 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளனர். நேற்று இரவு 8.30 மணியளவில் முகமாலை பகுதியில் இடம்பெற்ற இந்த விபத்தில் முன்னாள் சென்ற இராணுவ வாகனத்தை பின்னால் சென்ற டிப் 02 >

# இலங்கையில் இன்னமும் ஓராண்டுக்கு கொரோனா!



### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, மே 11
கொரோனா வைரஸ் பரவல் மீண்டும் தலைதூக்க அதிக வாய்ப்புகள் உள்ளன. மக்கள் அநாவசியச் செயற்பாடுகள் அனைத்தையும் தவிர்த்துக்கொண்டு தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும் என்று தெரிவிக்கும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அடுத்த ஒருவருட காலத்துக்கு கொரோனா அச்சுறுத்தல் நிலவும் எனவும் எச்சரித்துள்ளது. 02 >

ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும்

## தொழில் அடையாள அட்டை அவசியம்

பல்வேறு கட்டுப்பாடுகளை அறிவிக்கின்றது பொலிஸ்

கொழும்பு, மே 11
ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனாப் பரவல் தொடர்பான நெருக்கடி நிலைமை இன்னும் முற்றுமுழுதாக நீங்கவில்லை. தொழில் நடவடிக்கைக்குச் செல்பவர்கள் தமது தொழில் அடையாள அட்டையுடனே செல்ல முடியும். வீதிகளில் கண்டபடி பொதுமக்கள் நடமாட முடியாது. இவ்வாறு பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தி 02 >

## பணியாளர்களை இடைநிறுத்தாதீர்

யாழ்ப்பாண வணிகர் கழகம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 11
வர்த்தகர்கள் தமது வர்த்தக நிலையங்களில் பணிபுரிந்த பணியாளர்களை தற்போதுள்ள சூழ்நிலையில் இடைநிறுத்தவோ பணிநீக்கம் செய்யவோ முயற்சிக்க வேண்டாம். இவ்வாறு யாழ்ப்பாண வணிகர் கழகத்தின் உபதலைவர் இ.ஜெயசேகரன் 02 >

## பொதுத் தேர்தலுக்கு தடைகோரும் வழக்கு இன்று விசாரணைக்கு

கொழும்பு, மே 11
ஜுன் மாதம் 20 ஆம் திகதி நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை இடைநிறுத்தும் வகையிலான தடையுத்தரவை பிறப்பிக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் தாக்கல் 02 >

சுகாதார வழிகாட்டல்களை கடைப்பிடித்து

## கொரோனாவுக்கு முடிவு கட்டுங்கள்

*தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை வேண்டுகோள்*

கொழும்பு, மே 11
கொரோனா பாதிப்பையடுத்து ஊரடங்கால் முடக்கப்பட்டிருந்த எமது நாடு இன்றிலிருந்து மெல்ல மெல்ல விடுதலை பெறுகின்றது. எனவே, சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களை முறை 08 >

## கொரோனா ஒழியவில்லை: மக்கள் ஒத்துழைப்பு தேவை



கொழும்பு, மே 11
இலங்கையில் கொரோனா வைரஸ் பரவல் குறிப்பிடத்தக்க அளவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இன்னமும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. இன்று திங்கட்கிழமையிலிருந்து இயல்பு நிலையை ஏற்படுத்திய பின்னரும் சில இடங்களில் முடக்கல் நிலையை 08 >

## இலங்கையில்....

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயலர் வைத்தியர் ஹரித அளுத்கே இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த இரண்டு மாதகாலமாக நாட்டை ஊரடங்கில் வைத்திருந்த நிலையில் இப்போது நாட்டை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. நாட்டின் பொருளாதார மற்றும் மக்களின் வாழ்வாதார தேவைகளை கருத்தில் கொண்டு இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றது. தொடர்ச்சியாக நாட்டை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முடியாது என்பதை நாம் அனைவரும் ஏற்றுகொள்ள வேண்டும்.

ஆரம்பத்தில் இலங்கையில் கொரோனா தொற்று பரவல் ஆரம்பித்த நேரத்தில் இருந்த அச்சுறுத்தல் நிலைமைகள் இப்போது இல்லை என்பது உண்மையே. ஆனால் வைரஸ் மீண்டும் பரவலாம் என்ற அச்சுறுத்தல் உள்ளது. ஆகவே மக்கள் நிலைமைகளை விளங்கிக் கொண்டு செயற்பட்டனர்.

அதேபோல் இன்று ஊரடங்கு தளர்த்தப்படுவதன் மூலமாக நாடு அச்சுறுத்தல் கட்டத்தில் இருந்து மீண்டுவிட்டதாக எவரும் நினைக்கக்கூடாது. எனவே மக்கள் மிகவும் கவனமாக அடுத்து வரும் ஒரு சில வாரங்களில் செயற்பட வேண்டும். முகக் கவசங்களை அணிவது, சமூக இடைவெளியை பின்பற்றுவது, மற்றும் நோய் அறிகுறிகள் தென்படின் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பின்பற்றுவது என்பது கட்டாயமானதாகும்.

அடுத்த ஆறுமாத காலம் இப்போது முன்னெடுக்கும் சுகாதார கட்டுப்பாடுகளைப் பின்பற்ற வேண்டும். எவ்வாறு இருப்பினும் இன்னும் ஒருவருட காலம் நாடு கட்டுப்பாடுகளுடன் இயங்க வேண்டும். மார்ச் மாதத்துக்கு முன்னர் இருந்த சூழல் இப்போது உருவாகாது.

கொரோனாவுக்கு உரிய மருந்து கிடைக்கும் வரையில் மக்கள் நெருக்கடிகளை சந்தித்து அதனுடன் போராடிக்கொண்டே அடுத்த கட்ட நடவடிக்கைகளை கையாள வேண்டிவரும். எனவே நிலைமைகளை சரியாக கருத்தில் கொண்டு மக்கள் அநாவசியமாக நெருக்கடிகளை ஏற்படுத்தாது சமூக இடைவெளிகளைப்பின்பற்றுங்கள் என்பதையே எம்மால் கூற முடியும்- என்றார். (ஓ,5)

## எவருக்கும்...

மைப்படுத்தல் நிலையத்திலிருந்து 19 பேர், பலாலி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த ஒருவர் என்று 27 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். (ஓ,5)

## டிப்பர்..

பர் வாகனம் மோதியதிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில இரு வாகனங்களும் சேதமடைந்துள்ளன. வீதியில் சென்ற இராணுவ வாகனம் அருகில் இருந்த ரயில் கடவையில் தண்டவாளத்தில் குறுக்காக தூக்கி வீசப்பட்டது. காயமடைந்த இராணுவத்தினர் பளை மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் இருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளனர். (ஓ,5,6)

## தொழில்...

யட்சகர் ஜாலிய சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது தொடர்பில் காணொலியை வெளியிட்டு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச பொறிமுறைகளைச் செயற்படுத்தும் நோக்கத்தோடு மட்டுமே ஊரடங்கு தளர்த்தப்பட்டுள்ளது. இந்தக் காலப்பகுதியில் தமது தொழில்களுக்கு செல்லும் அரச ஊழியர்கள் மற்றும் தனியார் துறையினர் அவர்களின் சொந்த வாகனங்களில் செல்வதாயின், அரச ஊழியர்கள் முற்பகல் எட்டு மணிக்குள் தமது தொழில் நிலையங்களுக்கு செல்வதற்கு முயற்சிப்பதுடன், பிற்பகல் 3 மணி அல்லது 3.30 மணிக்குள் தொழில் நிலையத்திலிருந்து வெளியேற வேண்டும். இதேவேளை தனியார் துறையினர் முற்பகல் 8. 30 மணியிலிருந்து 10 மணிக்குள் தொழில் நிலையங்களுக்குச் செல்வதுடன், மாலை 4 மணிக்குள் தொழில் நிலையத்திலிருந்து வெளியேற வேண்டும்.

இந்த காலப்பகுதியில் வாகன நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதுடன். இதற்கு அனைவரும் ஒத்துழைப்பு பெற்றுக் கொடுக்க வேண்டும்.

இந்நிலையில் வழமை போன்றே சோதனைச்சாவடி நடவடிக்கைகள் இடம்பெறுவதுடன், நபர்களுக்கிடையிலான இடைவெளியை பேணுவதற்காக ஒரு சில இடங்களில் அதிகளவான சோதனைகளை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதேவேளை அத்தியாவசிய தேவைகளுக்காக செல்பவர்கள் அவர்களின் அடையாள அட்டை இறுதி இலக்கத்துக்கு அமையவே செல்ல வேண்டும்.

வீட்டுக்கு அருகில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களில் பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்வதே மிகவும் சிறந்த வழிமுறையாகும், என்றார். (ஓ,5)

## பொதுத் தேர்தலுக்கு...

செய்யப்பட்ட முதல் அடிப்படை உரிமை மீறல் மனு மீதான விசாரணை இன்று இடம்பெறவுள்ளது.

மூவரடங்கிய நீதிபதிகள் குழு முன்னிலையில் இந்த மனு மீதான விசாரணைகள் இடம்பெறவுள்ளன. நீதிபதிகள் குழாமுக்கு நீதிபதி ஜெயந்த ஜெயசூர்யா தலைமை தாங்குவார். அத்துடன் நீதிபதிகள் குழாமில் எஸ். துரைராஜா மற்றும் முர்து பெர்னாண்டோ ஆகியோரும் உள்ளடங்கியுள்ளனர்.

எதிர்வரும் ஜூன் 20 ஆம் திகதி இலங்கையில் பொதுத் தேர்தல் நடாத்த திட்டமிடப்பட்டு வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை ரத்து செய்யக் கோரி கடந்த 2 ஆம் திகதி, சட்டத்தரணி சரித்த குணரத்னவால் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அரசமைப்பின் 104 (அ) சரத்துடன் இணைத்து வாசிக்கத்தக்கதாக 126,17 ஆம் சரத்துக்களின் அடிப்படையில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, ஆணைக்குழு உறுப்பினர்களான என்.ஜே.அபேசேகர, ரத்னஜீவன் ஹூல், ஜனாதிபதி செயலர் பி.பீ. ஜயசுந்தர, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க மற்றும் சட்ட மா அதிபர் ஆகியோரை பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டே இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை ஜூன் மாதம் 20 ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவதற்கு எதிராக இதுவரை 12 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது . (ஓ,5)

## இலங்கையில் இன்று...

டங்கு மறு அறிவித்தல் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது. களுத்துறை, புத்தளம் உள்ளிட்ட ஏனைய 23 மாவட்டங்களிலும் ஊரடங்கு இன்று முதல் மறுஅறிவித்தல் வரை , தினமும் இரவு 8 மணி முதல் அதிகாலை 5 மணி வரை மட்டுமே நடைமுறைப்படுத்தப்படும்.

கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் ஊரடங்கு நடைமுறையில் இருக்கின்ற போதிலும் இயல்பு வாழ்க்கை மற்றும் நிறுவனச் செயற்பாடுகளை வழமை நிலைக்குக் கொண்டு வருதல் ஏற்கனவே திட்டமிடப்பட்டவாறு இன்று முதல் ஆரம்பமாகும்.

ஏற்கனவே வெளியிடப்பட்ட அறிவித்தல்களில் குறிப்பிடப்பட்ட அதற்கான நிபந்தனைகளில் மாற்றங்கள் இல்லை எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது. (ஓ,5,22)

## கொரோனா 856....

மேலும் 61 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதையடுத்துக் குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 260 இலிருந்து 321 ஆக உயர்ந்துள்ளது.

அந்தவகையில், இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றியதாக அடையாளம் காணப்பட்டுள்ள 856 பேரில் 9 பேர் உயிரிழந்துள்ள நிலையில் தற்போது 526 நோயாளிகள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இதேவேளை, மேலும் 116 பேர் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர். (ஓ.5,22)

## பணியாளர்களை...

தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணக் குடாநாடு மீண்டும் வழமை நிலைக்குத் திரும்ப உள்ளது. எனினும் கொரோனா நோய்த் தாக்கமானது முற்றாக நீங்கி விடவில்லை என்ற விடயத்தைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் மற்றும் வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

யாழ். நகர் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்களில் அளவுக்கு அதிகமான ஊழியர்களை கடமையில் ஈடுபடுத்தாது தங்களுடைய வர்த்தக நிலையத்தில் அதிக அளவிலான மக்களை உள்ளே அழைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளாது சமூக இடைவெளியை அவசியம் பின்பற்றவேண்டும். அத்தோடு கொரோனாத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் .

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்களைக் கட்டாயம் பின்பற்றி அனைவரும் செயற்படுவதன் மூலமே நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குச் சொந்தமான இடங்களில் உள்ள வர்த்தக நிலையங்களுக்கு வருபவர்கள் கைகளைக் கழுவுவதற்கு, மாநகர சபையால் தண்ணீர் கொள்கலன்கள் வைக்கப்பட்டு அவற்றுக்கு நீர் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மாநகர சபையிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது, - என்றார். (ஓ.5)


# மரண அறிவித்தல்

தோற்றம்
17 . 01 . 1936



மறைவு
08 . 05 . 2020

## திருமதி சின்னத்தம்பி புவனேஸ்வரி (மலர்)

கந்தர்மடம் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சங்கோலை மாவிட்டபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி புவனேஸ்வரி கடந்த (08.05.2020) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு-இராசம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் வள்ளியம்மை தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் சிற்றம்பலம், பொன்னம்பலம் (ஜேர்மனி), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சரோஜினி, ஜெயலக்ஸ்மி (ஜேர்மனி), ஐயாத்துரை, தெய்வானை, சின்னத்தங்கம், கந்தையா ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கௌசலா, காலஞ்சென்ற மேகலா மற்றும் விஜயகுமார் (கனடா), வசந்தகுமார், ஜெயகலா, செல்வகுமார் (கனடா), சாந்தகுமார் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கருணாநந்தன், காலஞ்சென்ற விஜய பாஸ்கரன் மற்றும் லோஜினி (கனடா), சுதர்ஜினி, சோபனா, சங்கீதா ஆகியோரின் மாமியாரும், கதீசன் (கனடா), நிரோஜன், ஜபர்னா (கனடா), திலக்ஷனா (கனடா), கஜீபன் (கனடா), கோபிகா, யக்ஷான், கிதியோன், தனுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கீரிமலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

# வேட்புமனு விடயத்தில் சந்தேகம் இருந்தால் நீதிமன்றை நாடலாம்!

## தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப் பணிப்பாளர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 11**

**நாடாளுமன்றத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டது சட்டபூர்மற்றது என்று கருதுபவர்கள் அதற்கான தீர்வை நீதிமன்றத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப் பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத் தேர்தலை கடந்த ஏப்ரல் 25ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய கடந்த மார்ச் மாதம் மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இந்தத் தினங்களை விடுமுறை தினங்களாகப் பின்னர் அரசு அறிவித்துள்ளது. அதனால் அந்தத் தினங்களில் ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்கள் செல்லுபடியற்றவை என்று பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர். அது தொடர்பில் கருத்துத் தெரிவித்தபோதே தேர்தல்கள் ஆணைக்குழுவின் சட்டப் பணிப்பாளர் நிமால் புஞ்சிஹேவா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொதுத் தேர்தலுக்கான தினம் அறிவிக்கப்பட்டபோது, வேட்புமனுத் தாக்கலுக்கான தினமும் அறிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமையவே வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன. இந்தத் தினங்களை சுயாதீன தேர்தல்கள் ஆணைக்குழுவால் மாற்றவோ அல்லது பிற்போடவோ முடியாது. அதனால்தான் அந்தத் தினங்களில் வேட்புமனுக்கள் கையேற்கப்பட்டன. அதில் எந்தச் சட்டச் சிக்கலும் கிடையாது.

இந்தத் தினங்கள் விடுமுறை நாள்கள் என்பதால் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் செல்லுபடியற்றவை என்று அரசியல் வட்டாரத்தில் உள்ள பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த விடயத்தில் சட்டச் சிக்கல் உள்ளது என்று கருதுபவர்கள் நீதிமன்றத்தை நாடி அதன் ஊடாகத் தீர்வைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தேர்தல்கள் ஆணைக்குழு செவ்வாய்க்கிழமை கட்சிப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளது. இந்த விடயம் தொடர்பாகத் தேர்தல்கள் ஆணையாளரிடம் வினவப்பட்டால் அதற்கான பதிலை அவர் வழங்குவார். இந்தச் சந்திப்பில் இந்த விடயம் தொடர்பாகப் பரவலான கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது- என்றார்.(எ)



# காத்தான்குடி மருத்துவமனையில் 55 பேர் மீண்டனர்

மட்டக்களப்பு, மே 11

காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த கொரொரனோத் தொற்றாளர்களில் பூரண சுகமடைந்த 55 பேர் நேற்று ஞாயிற்றுக்கிழமை அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பரின் ஏற்பாட்டில் அவர்களுக்கான பழங்கள் மற்றும் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. சிறுவர்களுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

வழியனுப்பும் நிகழ்வில் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் மருத்துவர் எம்.எஸ்.ஜாபீர், மட்டக்களப்பு கல்லடி 231 படைப்பிரிவின் பிரிகேடியர் பள்ளேக்கும்பர மற்றும் கட்டளை அதிகாரி மேஜர் எஹெலப் பொல காத்தான்குடி நகர சபை தவிசாளர் எஸ்.எச்.அஸ்பர் உட்பட இராணுவ உயரதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

வைத்தியசாலையின் நுழைவாயிலில் தேசியக் கொடிகளை அசைத்து அவர்கள் வழியனுப்பி வைக்கப்பட்டனர். காத்தான்குடி ஆதார வைத்தியசாலை கொரோனா சிகிச்சை நிலையமாக மாற்றப்பட்டதையடுத்து, இது வரை 62 பேர் சிகிச்சை பெற்று வந்தனர். அவர்களில் பூரண சுகமடைந்த 55 பேர், அவர்களின் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு பண்டார நாயக்க மாவத்தை மற்றும் பேருவளை மத்துகம ஜாஎல போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# பாடசாலைகளை மீள ஆரம்பிக்கும் முடிவு அடுத்த வாரம்

கொழும்பு,மே 11

பல கட்டங்களாக பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது குறித்த முடிவு அடுத்த வாரமளவில் எடுக்கப்படும் என்று கல்வி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

மாத்தறையில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

மாகாண மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பைப் பெற்று பாடசாலைகளை மீள ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளோம். ஆனால் ஆரம்பப் பிரிவு மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளை ஆரம்பிக்க இதுவரை தீர்மானிக்கப்படவில்லை. அனைத்துப் பாடசாலைகளிலும் கிருமி ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்ப டும். சுகாதார அதிகாரிகளின் ஆலோசனைக்கமைய கிருமி ஒழிப்பு நடவடிக்கையின் பின்னர் 4 நாள்கள் வரை பாடசாலைகள் மூடப்படும்.

இரண்டாம் கட்டமாக சாதாரணதர மாணவர்களைப் பாடசாலைகளுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பின்னரே ஆரம்ப பிரிவு மாணவர்கள் குறித்து கவனம் செலுத்தப்படும்- என்றார். (க)

# 3 கோடி ரூபா பெறுமதியான 4 கிலோ ஹெரோய்ன் மீட்பு

புத்தளம்,மே 11



புத்தளம் கடுமையான் குளம் பகுதியில் மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பின் போது 3 கோடி 50 இலட்சம் ரூபா பெறுமதியான 4 கிலோ 368 கிராம் ஹெரோ ய்ன் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

வீடொன்றில் மறைத்துவைத்து விற்பனை செய்யப்பட்ட ஹெரோய்னே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. வீட்டில் அலுமாரி ஒன்றுக்குள் மிகவும் சூட்சுமமான முறையில் மறைத்துவைக்கப்பட்டிருந்த நிலையில் ஹெரோய்ன் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளபோது, அத்தியாவசிய சேவைக்காக பொலிஸாரால் வழங்கப்படும் போக்குவரத்து அனுமதி (பாஸ்) பெற்று குடிநீர் விநியோகம் செய்யும் வாகனம் ஒன்றின் மூலம், ஹெரோய்ன் போதைப்பொருள் கொண்டு வரப்பட்டுள்ளது என்று போதை ஒழிப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஏ.எச்.எம்.திசாநாயக்க தெரிவித்தார்.

சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் வியாபாரிகள் மூவருடன், அதற்கு உதவிபுரிந்த மூவரும், அலுமாரி தயாரித்துக் கொடுத்த ஒருவருமாக ஏழு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (க)

# முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதம் அருவருப்பானது

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, மே 11



நாட்டில் முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகப் பரவலாக அரங்கேற்றப்படும் இனவாதச் செயற்பாடுகள் மிகவும் அருவருக்கத்தக்கவை. கௌதம புத்தரின் உன்னத போதனைகளுக்கு இவை முரணானவை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேதமதாஸ.

அவர் தனது உத்தியோகபூர்வ ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே இவ்வாறு குறிப்பி ட்டுள்ளார்.

அதில் உள்ளதாவது:

எமது சமூகத்தில் தொடக்க நிலையில் உள்ள இனவாதமானது எமது தாய்நாட்டின் மக்கள் மத்தியில் இன, மத சமூகப் பிரிவினைகளை மேலும் அதிகரிக்கச் செய்துள்ளது. இது எமது தேசிய நலன்களுக்கு எதிரானதும், அதற்குக் குந்தகம் விளைவிப்பதுமாகும்.

மனிதத் தன்மைக்கும், உயர் மனித விழுமியங்களுக்கும் கூட அது எதிரானது. எமது முஸ்லிம் சகோதரர்களுக்கு எதிராகப் பரவலாக அரங்கேற்றப்படும் இனவாதச் செயற்பாடுகள் அருவருக்கத்தவை. நம் அனைவராலும் எதிர்க்கப்பட வேண்டியவை.

இத்தகைய வெறுக்கத்தக்க செயற்பாடுகள் கௌதம புத்தரின் உன்னத போதனைகளுக்கும் முரணானவை. ஆசீர்வதிக்கப்பட்ட அந்தப் போதனைகளுக்கு தவறான அர்த்தம் கற்பிப்பதற்கு எடுக்கப்படும் எந்த முயற்சியும் அவற்றுக்கான எதிரான குற்றமாகவும், தேசத் துரோகமாகவுமே அமையும்-என்றார். (எ)

# புதிய வாய்ப்புக்களை பயன்படுத்த பாதுகாப்பான சூழலும் அவசியம்

## கரு ஜயசூரிய சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 11


தற்போதைய சூழ்நிலையில் தோற்றம் பெறக்கூடிய புதிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உயர் மட்டத்தில் பயன்படுத்திக்கொள்வதுடன், அதற்கேற்ற பாதுகாப்பான சூழலை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமையாகும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதுகுறித்து அவர் தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவில் மேலும் கூறியிருப்பதாவது:

தற்போது எமது நாட்டுமக்கள் கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றுக்கு மத்தியில் வாழ்க்கையைக் கொண்டு நடத்துவது குறித்து அறிவூட்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இத்தகையதொரு சூழ்நிலையில் தோற்றம் பெறக்கூடிய புதிய வாய்ப்புக்கள் அனைத்தையும் உயர்மட்டத்தில் பயன்படுத்திக் கொள்வது அவசியமாகும். தலைவர்கள், முயற்சியாளர்கள், இளைஞர், யுவதிகள் உள்ளிட்டோரின் பங்களிப்பை உச்சமட்டத்தில் பெற்றுக்கொள்ளும் அதேவேளை அதற்கேற்றவாறான பாதுகாப்பான சூழலை உருவாக்கிக்கொடுப்பது அரசாங்கத்தின் கடமையாகும் - என்றுள்ளார். (ப)

# நிதி நிலைமை தொடர்பான கருத்துகளில் முரண்பாடு

## சுட்டிக்காட்டுகிறார் ஹர்ஷ டி சில்வா



**கொழும்பு, மே 11**

**அரச ஊழியர்களின் சம்பளம் மற்றும் விசேட கொடுப்பனவுக்காக மாதாந்தம் 100 பில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது என்று ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ.ஜயசுந்தர தெரிவித்துள்ளார். ஆனால் மத்திய வங்கி மற்றும் நிதி அமைச்சின் கணக்கறிக்கைக்கு அமைய 54 பில்லியன் ரூபா மட்டுமே செலவிடப்படுகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.**

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது மேலதிக கொடுப்பனவும், விசேட கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளதால் 34 பில்லியன் ரூபா அளவில் அரச ஊழியர்களின் சம்பளத்துக்காக செலவிடப்படுகின்றது. அதேவேளை, உலக சந்தையில் எண்ணெய் விலை குறைந்துள்ளதால் அதனூடாக ஈட்டிய வருமானம் 200 பில்லியன் ரூபா மத்திய வங்கியில் சேமிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி அறிக்கை தெரிவித்துள்ளது. வெளிநாடுகளில் இருந்தும் பெருந்தொகையான நிதி கிடைத்துள்ளது.

இவற்றைக் கொண்டு அரச ஊழியர்களின் சம்பளத்தைத் தடுத்து வைக்காமல் பொருளாதாரச் செயற்பாடுகளைச் சிறந்த முறையில் மேற்கொள்ளமுடியும். பேராசிரியர் பி.பீ.ஜயசுந்தர தனது தனிப்பட்ட கருத்தை ஜனாதிபதி செயலகத்தின் சின்னம் பொறிக்கப்பட்ட கடித உறையில் வெளியிட்டிருந்தமை தவறாகும். எனினும் அவரது வேண்டுகோளுக்கு இணங்க யார் வேண்டுமானாலும் அவர்களின் சம்பளத்தைத் தியாகம் செய்யலாம். ஆனால் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் அவருக்கு விளக்கமளிக்க வேண்டியுள்ளது.

கொவிட் 19 வைரஸ் தொற்றின் காரணமாக பாடமொன்றைக் கற்றுக் கொண்டுள்ளோம். அரச துறையினர் முதல் நிலையிலும், தனியார் துறையினர் அவர்களுக்கு பின்னாலும் இருக்கின்றனர் என்பதே அது. இந்த நாட்டைப் பொறுத்தவரையில் 1.2 மில்லியன் பேரே அரச துறையில் தொழில் செய்கின்றனர். 8.2 மில்லியன் பேர் தனியார் துறைகளில் தொழில் செய்கின்றனர். தனியார் துறையைச் சேர்ந்த 8.2 மில்லியன் பேர் எமது நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்ற முயற்சி செய்கின்றனர்.

அதேவேளை சேவை ஒழுங்கு சங்கத்தினரிடம் கலந்துரையாடி தொழிலுக்கு சமூகமளிக்க முடியாமல் இருக்கும் ஊழியர்களின் நாளாந்த சம்பளத்தில் 50 வீதத்தை மாத்திரம் பெற்றுக் கொடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. 50 வீதத்தை கழித்தால் அவர்கள் எவ்வாறு தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வார்கள்?. சில தொழிற்சாலைகள் ஊழியர்களுக்கு ஊதியம் பெற்றுக் கொடுப்பதற்காக வங்கிக் கடனுக்கு விண்ணப்பம் அனுப்பியுள்ள போதும் இதுவரை அவை வழங்கப்படவில்லை. வங்கிக் கடன்களை வழங்குவதற்காக 50 பில்லியன் ரூபாவே வழங்கப்பட்டுள்ளது என்றும், அந்த தொகை இந்தக் கடன்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு போதுமானதாக இல்லை என்றும் வங்கி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர். தற்போது அரசு தம்மிடம் நிதி இல்லை என்று தெரிவித்து வருகின்றது. கிடைத்துள்ள நிதியைக் கொண்டு அரசு சிறந்த முறையில் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ளாது கடந்த மார்ச் மாதம் 6 ஆம் திகதியிலிருந்து எதிர்வரும் மூன்று மாதங்களுக்கான செலவுகள் தொடர்பில் இடைக்கால கணக்கறிக்கைக்கான அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். நாடாளுமன்றம் இயங்காத நிலையில் அவர் யாரிடம் அனுமதி பெற்றுக் கொண்டுள்ளார்?. அவர் தன்னிச்சையாக முடிவெடுக்க முடியாது- என்றார். (எ)

# பல்கலைக்கழகங்களில் கற்பித்தல் நடைபெறாது

## அமைச்சர் பந்துல தெரிவிப்பு

கொழும்பு, மே 11



பல்கலைக்கழகங்கள் இன்று திறக்கப்பட்டாலும், கற்பித்தல் செயற்பாடுகள் மற்றும் தங்குமிடங்களைத் திறப்பது போன்ற நடவடிக்கைகள் அன்றைய தினம் ஆரம்பிக்கப்படாது என்று உயர்க் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

அன்று கிருமி ஒழிப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதால், கல்விச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய ஒரு பிரிவினரை மாத்திரம் பல்கலைக்கழகங்களுக்கு அழைக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு இடையிலான இடைவெளியைப் பேண முடியாதால், எந்தவொரு காரணத்துக்காகவும் பழைய முறையில் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் எண்ணம் இல்லை.

மாணவர்களின் பாதுகாப்புத் தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்தப்படும். தற்போதைய சூழலில் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் இணையத்தின் மூலம் முன்னெடுக்கப்படுகின்றன. அந்தச் செயற்பாடுகள் தொடர்பில் பல்கலைகழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் பல்கலைக்கழக உபவேந்தர்களிடம் கேட்டறியப்படும் - என்றார். (க)



# இயக்கச்சியில் 160 பேர் விடுவிப்பு

பளை, மே 11

இயக்கச்சி 55ஆவது படையணியின் தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்க வைக்கப்பட்டிருந்த 160 பேர் அவர்களது சொந்த இடங்களுக்குச் செல்ல நேற்று ஞாயிற்றுக்கிழமை அனுமதிக்கப்பட்டனர்.

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் வாழைத்தோட்டம் ஆகிய பகுதிகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 22 ஆண்களும், 138 பெண்களும் தனிமைப்படுத்தல் முகாமில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். 18 நாள்களில் அவர்களுக்குக் கொரோனாத் தொற்று இல்லை என உறுதிப்படுத்தப்பட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்ட நிலையில், நேற்றுக் காலையில் அவர்கள் சொந்த இடங்களுக்குச் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (க-20)

# முஸ்லிம்களின் இறுதிக்கிரியை; மீள்பரிசீலனைக்குக் கோரிக்கை

## ஜனாதிபதிக்கு ரிஷாத் கடிதம்

கொழும்பு,மே 11



கொவிட் 19 வைரஸால் பீடிக்கப்பட்டு உயிரிழக்கும் முஸ்லிம்களின் இறுதிக் கிரியைகள் நடைபெற வேண்டிய முறைகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு, முன்னாள் அமைச்சர் ரிஷாத் பதியூதீன் கடிதம் அனுப்பியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

கொவிட் 19 வைரஸால் தொடர்ந்தும் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாசாக்கள் எரிக்கப்படுவதால், முஸ்லிம் சமூகம் பெரும் கவலை கொண்டுள்ளது.

கொரோனா வைரஸால் உயிரிழக்கும் நபர்களின் சடலங்களை எரியூட்டுகின்றமை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனுடன்தொடர்புடையஆலோசனைகளை மீள்பரிசீலனை செய்ய வேண்டும். எனவே முஸ்லிம்களின் ஜனாசாக்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி அளிக்க வேண்டும்- என்றுள்ளது. (க)



# ஆஸியிலிருந்து 272 பேர் மீட்பு

கொழும்பு,மே 11

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, ஆஸ்திரேலியாவில் சிக்கித்தவித்த 272 பேர் விசேட விமானம் மூலம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸுக்குச் சொந்தமான விசேட விமானம் மூலம் 272 பேரும், ஆஸ்திரேலியாவின் மெல்போர்னில் இருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர். நேற்றுக் காலை 6 மணியளவில் விமானம் 272 பேருடன் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கியது.

விமானப்படையினர் அழைத்து வரப்பட்டுள்ளவர்களின் உடல் வெப்பநிலையைப் பரிசோதித்து கிருமித் தொற்று நீக்கம் செய்தனர். 272 பேரையும் தனிமைப்படுத்தும் நடவடிக்கைக்காக இலங்கை இராணுவம் பொறுப்பேற்று, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அழைத்துச் செல்ல நடவடிக்கை எடுத்துள்ளது. (க)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## செயற்கைத்தனமான இயல்பு நிலை

இன்று முதல் நாட்டில் இயல்புநிலையை மீட்டெடுக்கும் நடவடிக்கைகளை அரசு முடுக்கிவிட்டுள்ளது.அதன் அர்த்தம், கொரோனா இலங்கையில் கட்டுப்பாட்டுக்குள் வந்துட்டது என்பதல்ல. மாறாக அரசுக்கு தேர்தல் போன்ற சில தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளவே இப்படி அவசரத்தனமான 'இயல்புநிலை' மாயையை அரங்கேற்றும் முனைப்புகள்.

மே11 ஆம் திகதிக்குப் பின்னரான கொரோனா கால வாழ்வு எப்போது முடியும் என ஏங்கி நின்ற மக்களுக்கு, அரசின் இந்த செயற்கைத்தனமான இயல்பு நிலையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் துளியும் மகிழ்ச்சியைத் தரவில்லை. ஏனெனில் என்ன நோக்கத்துக்காக இவ்வளவு நாட்களும் மக்கள் ஊரடங்கு வாழ்வுக்குள் தள்ளப்பட்டு, துயரை எதிர்கொண்டார்களோ அந்த அச்சம் துளியும் போக்கப்படாத நிலையிலேயே, இப்போது அரசு வைரஸோடு சேர்ந்து வாழப்பழகிக் கொள்ளுமாறு கூறுகின்றது. இப்படி வைரஸோடு சேர்ந்து வாழ்வதென்றால், இத்தனை நாட்களும் ஊரடங்கு போட்டு, வீட்டுக்குள் முடக்கி, பட்டினிக்குள் வாட வைத்தது ஏன்? பேசாமல் ஆரம்பத்திலேயே 'வைரஸோடு வாழப்பழகும்' முடிவை எடுத்திருந்தால், இத்தனை நாளும் மக்கள் துன்பப்பட்டிருக்கத் தேவையில்லையே. (அப்படி முடிவெடுத்திருந்தால் , குறைந்தபட்சம் வைரஸாவது நமக்கு நன்கு பழக்கப்பட்டு, நட்பாகி "முஸ்தபா முஸ்தபா..நட்புக்கு கொரோனா கூட பாதை வகுக்கும்" என்று கையைப் பிடித்துப் பாடியிருக்கும்)

இப்போது கூட வார்த்தையில் மட்டும் தான் இயல்பு நிலை மீண்டும் உருவாக்கப்பட்டிருப்பதாக அரசு கூறுகின்றதே தவிர , ஊரடங்கு கால நடைமுறைகளே தொடர்ந்தும் நீடிக்கப் போகின்றன. தினமும் இரவு 8 மணி முதல் காலை 5 மணி வரை ஊரடங்கு அமுல்படுத்தப்படவுள்ளது. தேசிய அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே சாதாரண மக்களின் நடமாட்டம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பணிக்குச் செல்வோர் கட்டாயம் தொழில் அடையாள அட்டைகளை அணிந்திருக்க வேண்டும். திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், களியாட்டங்கள் போன்ற மக்கள் கூடும் நிகழ்வுகளுக்கான தடையும் நீடிக்கிறது. தனியாள் இடைவெளி, முகக்கவசம் அணிதல் , கை கழுவுதல் என்பனவெல்லாம் தொடர்ந்தும் பின்பற்றப்படவே வேண்டும். அத்தோடு எங்காவது கொரோனாத் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டால் அந்த இடம் முடக்கப்படுவதுடன், குறித்த நபரோடு தொடர்புடையவர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படத்தான் போகிறார்கள். ஆக மொத்தம், வெளிப்பார்வைக்கு இயல்பு வாழ்வு தோற்றுவிக்கப்பட்டதாக அரசு அறிவித்தாலும், உண்மையில் அதே பழைய கொரோனாப் பெருந்தொற்றுக்கால அவலமே நீடிக்கப்போகின்றது.

"ஒருவருட காலத்துக்கு கொரோனா அச்சுறுத்தல் நிலவும்" என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை செய்துள்ளதை வைத்து நோக்கும் போது, ஒரு வருடத்துக்கு இதே நிலைதான் நீடிக்கப் போகின்றது என்பதை உணரமுடிகின்றது. அரசு தன் தேர்தல் தேவைக்காக என்னதான் கூத்துக் காட்டினாலும், அதைக் கண்டுகொள்ளாமல் நமக்கான பாதுகாப்பை நாமே தேடிக் கொள்வதுதான் இப்போது மக்கள் முன்னுள்ள வழி. சுகாதாரத் துறையினரின் அறிவுரைகளுக்கேற்ப ஊரடங்கு காலத்தில் இருந்ததைப் போல, கொரோனா பற்றிய விழிப்புணர்வுடன் தொடர்ந்தும் இருப்பதன் மூலமே, ஒரு பேராபத்தை நாம் தவிர்க்கமுடியும்.

# மானியம் இல்லையேல் சேவை நடத்தமாட்டோம்

## தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு



**கொழும்பு, மே 11**

**தனியார் பேருந்துகளுக்கு எரிபொருள் மானியம் வழங்கப்படாவிடின் நாம் சேவை நடத்த மாட்டோம் என்று இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயரத்ன தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தனியார் பேருந்துகளை இயக்குவது என்றால் எரிபொருள் நிவாரணம் வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை அரசிடம் முன்வைத்துள்ளோம். பேருந்துகளில் குறைந்த அளவில் பயணிகளை ஏற்றிச்செல்ல வேண்டும் என்ற கட்டுப்பாடுகளை அரசு பிறப்பித்துள்ள நிலையில் குறைந்த பயணிகளுடன் சேவைகளை நடத்தமுடியாது.

எமது மானியக் கோரிக்கைக்கு அரசு இதுவரையில் பதிலளிக்கவில்லை. அரசு மக்களுக்காக இதனைச் செய்யவேண்டும். எமக்கு எரிபொருள் நிவாரணம் வழங்கினால் நாம் பேருந்துகளை போக்குவரத்து சேவையில் பயன்படுத்துவோம். இல்லையேல் நாம் பேருந்துகளை போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடுத்தமாட்டோம்-என்றார்.

பெரும்பாலான அரச, தனியார் துறையினரது சேவை நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளன. இருப்பினும் போக்குவரத்து சேவையில் தனியார் பேருந்துகளை ஈடுபடுத்துவது தொடர்பில் இதுவரையில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. (ஒ,5)

## ரயில் சேவைகள் இன்று ஆரம்பம்

ரயில் பயணிகளுக்கான அனைத்து சுகாதார பாதுகாப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும், அதற்கிணங்க அத்தியாவசிய சேவைகளுக்காக இன்று முதல் ரயில் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன எனவும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் உட்பிரவேசிக்கும் பயணிகளின் உடல் நிலையைப் பரிசோதிக்கும் வகையில் 2 நவீன தொழில்நுட்ப 'டோமோ' கமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கமரா பொருத்தப்பட்டுள்ள வாயில் வழியே பயணிகள் உட்பிரவேசிக்க வேண்டும் என்றும், அதிகரித்த உஷ்ணத்துடன் காணப்படும் பயணிகளுக்கு உடனடியாக சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் ரயில்வே மேலதிக பொது முகாமையாளர் டி.எஸ்.பொல்வத்தகே தெரிவித்தார்.

இதற்கு மேலதிகமாக கைகளால் உஷ்ண நிலையை பரிசோதிக்கும் உபகரணங்கள் ரயில்வே பாதுகாப்பு அதிகாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள நிலையில் கோட்டை ரயில் நிலையத்துக்கு டிஆர் விஜேவர்தன மாவத்தை ஊடாக பிரவேசிக்கும் பயணிகள் அதன் மூலம் பரிசோதிக்கப்படவுள்ளனர்.

அதற்கு மேலதிகமாக ரயில் நிலையத்துக்கு வரும் பயணிகள் கைகளை கழுவுவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் பயணிகள் அனைவரும் முகக் கவசங்களை அணிந்து வரவேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

அத்தியாவசிய சேவைகளுக்காக செல்லும் சுமார் 3 ஆயிரம் பயணிகள் பயணத்துக்காக விண்ணப்பித்துள்ளனர் எனவும் அவர் மேலும் கூறினார். (ஒ,5,22)

## நீதிமன்ற நடவடிக்கைகள் இன்று ஆரம்பம்

கொழும்பு, மே 11

நீதிமன்ற நடவடிக்கைகளை இன்று முதல் பல கட்டங்களில் ஆரம்பிக்க நீதி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அரசு வழங்கிய சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நீதிச் சேவை ஆணைக்குழு தயாரித்த சிறப்பு சுற்றறிக்கையின்படி நீதிமன்ற நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

மேல் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள் மற்றும் நீதிவான் நீதிமன்றங்களின் பணிகள் இன்று முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

நீதி அமைச்சின் தீர்மானத்தின் படி, சந்தேகநபர்கள் கொழும்புக்கு வெளியே உள்ள நீதிமன்றங்களில் முற்படுத்தப்படவுள்ளனர். விளக்கமறியலில் உள்ள சந்தேகநபர்களின் வழக்குகள் மட்டுமே முதல் கட்டத்தில் விசாரிக்கப்படவுள்ளன.

கொழும்பு நீதி வலய வழக்குகள் சமீபத்திய வீடியோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி விசாரிக்கப்படும் என்று நீதி அமைச்சின் செயலர் தெரிவித்தார்.

நீதிபதிகள், வழக்கறிஞர்கள் உட்பட அனைத்து நீதித்துறை அதிகாரிகளும் சுகாதார மற்றும் பாதுகாப்பு வழிகாட்டுதல்களை பின்பற்றவேண்டும் என்று நீதி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ஒ,5)

## 'உலக நாயகன்' ரணில்; வஜிர புகழாரம் சூட்டுகிறார்

கொழும்பு, மே 11

முழு உலகுக்கும் தலைமைத்துவம் கொடுக்கக் கூடிய ஆற்றல் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருப்பதாக அந்தக் கட்சியின் மூத்த உறுப்பினர்களில் ஒருவரான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி இரு அணிகளாக பிளவுபட்டுள்ளமை குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்கள் சஜித் பக்கமே இருப்பதாக முன்வைக்கப்படும் கருத்தை முழுமையாக ஏற்கமுடியாது. பொதுத்தேர்தலில் அனைத்து மாவட்டங்களிலும் எமது கட்சி போட்டியிடுகின்றது.

ஆசியாவிலுள்ள பழமையான பலம் பொருந்திய அரசியல் கட்சி ஐக்கிய தேசியக்கட்சிதான். முழு உலகத்துக்கும் தலைமைத்துவம் வழங்கக் கூடிய ஆற்றல் படைத்த ரணில் விக்கிரமசிங்கவே அக்கட்சிக்கு தலைமைத்துவம் வழங்குகிறார். போட்டிக்கு தயாராகிவிட்டோம். பிரதான அரசியல் கட்சியாகவே களமிறங்கியுள்ளோம் என்றும் அவர் கூறினார்.

அத்துடன், கிராம மக்கள் சஜித்தையே கேட்கின்றனர் என்றால், எதற்காக ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியை தழுவவேண்டும் எனவும் அவர் கேள்வி எழுப்பினார். (ஒ,5,44)

## மணல் கடத்தல் 3 சாரதிகள் கைது

கிளிநொச்சி, மே 11
தருமபுரம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட மயில்வாகனபுரம் பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டன ரென்ற குற்றச்சாட்டில்3 டிப்பர் களுடன் சாரதிகள் கைதுசெய் யப்பட்டுள்ளனர் என்று பொலி ஸார் தெரிவித்தனர்.

நாட்டில் ஊரடங்குச்சட்டம்நடை முறையிலுள்ள காலப்பகுதி யில் இவ்வாறு சட்டவிரோத மாக மணல் அகழ்வு இடம்பெற் றுள்ளன என்று தெரிவிக்கப்ப டுகின்றது.

இதேவேளை, கல்மடு வில்லுக் குளம் பகுதியில் கசிப்பு உற் பத்தியில் ஈடுபட்டாரென்ற குற் றச்சாட்டில் ஒருவர் கைதுசெய் யப்பட்டுள்ளார். அவரிடமி ருந்து 800லீற்றர் கோடா, 99 போத்தல் கசிப்பு என்பன மீட் கப்பட்டன என்றும் தருமபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள் ளனர். அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-113)

# இணையவழிக் கற்கை; வசதியின்றி மாணவர்

## முல்லைத்தீவில் இந்த நிலைமை

**முல்லைத்தீவு, மே 11**

**ஊரடங்கு காரணமாக பாடசாலைக் கல்வியை வீட்டிலிருந்தே இணையம் மூலமாகக் கற்றுக்கொள் ளுங்கள் என்று அறிவுறுத்தப்பட்டுள்ள நிலையில், முல்லைத் தீவு மாவட்டத்தில் இணையவழிக் கல்வியைத் தொடரமுடி யாத பல ஆயிரம் மாணவர்கள் உள்ளனர். அவர்கள் தொடர்பில் எவருமே எதுவித கரிசனையும் கொள்ளவில்லை என்று அங்குள்ள பெற்றோர் கவலை தெரிவிக்கின்றனர்.**

தற்போது மாணவர்கள் வீடுகளில் இணையவழிக் கற்கையில் ஈடுபடுகின்ற னர். ஆனால் கற்றலுக்கான ஆரம்ப வச திகள்கூட இல்லாத நிலையில் முல்லை த்தீவில் பல மாணவர்கள் உள்ளனர். வசதியுள்ள குடும்பங்களிடம் நவீன அலைபேசி, ரப் உள்ளிட்ட உபகரணங் கள் உள்ளன. அத்தகைய குடும்பங்க ளைச் சேர்ந்தவர்கள் இலகுவில் ஒன் லைன் கற்றல் சேவைகளைப் பெற்றுக் கொள்ளமுடிகின்றது. இத்தகைய உபகர ணங்களை வைத்திருந்தாலும் அதற்கு ரிய இணைய இணைப்பு (அலைபேசி அலைவரிசை) மிகக்குறைவா கவுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கிராமப் புறங்களிலேயே இணைய இணைப் பைப் பெற்றுக்கொள்ளமுடியாதுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக புதுக்குடியிருப்பில் சுதந்திர புரம், இருட்டுமடு, உடையார்கட்டு, குர வில், மூங்கிலாறு, தேராவில், மாணிக்க புரம், இளங்கோபுரம், றெட்பானா, விசு மடு, நெத்தலியாறு போன்ற பகுதிகளில் இந்த நிலை தொடர்கின்றது.

இந்தப் பகுதிகளில் சுதந்திரபுரம் அ.த. க.பாடசாலை, உடையார்கட்டு மகா வித் தியா லயம், குரவில் அ.த.க. பாடசாலை, பாரதி மகா வித்தியாலயம், விஸ்வநாதர் அ.த.க.பாடசாலை, விஸ்வமடு மகா வித் தியாலயம் உள்ளிட்ட பாடசாலைகளில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாண வர்கள் கல்விகற்று வருகின்றனர். இவர் களே இந்தப்பிரச்சினையை எதிர்கொண் டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின் றது. (த-19)



## ‘வேரோடும் துயரம்’ பேர்லினில் நேற்று

கொழும்பு, மே 11
முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்ட ஈழத்தமிழர்களின் குறியீடாக ஜேர்மன் தலைநகர் பேர்லின் மண்ணில் புகழ் பெற்ற ஒரு வளாகத்தில் 2012 இல் நட்டிருந்த அப்பிள் மரத்தை நேற்று ஞாயிற்றுக்கிழமை பேர்லின் வாழ் மக்கள் பார்வையிட்டனர்.

கொல்லப்பட்ட மக்களுக்கும், ஈகம் செய்த மாவீ ரர்களுக்கும் அதில் வணக்கம் செலுத்தப் பட்டது.

அப்பிள் மரம் தனது வேர்களை எப்படி மண் ணில் ஆழமாகப் பரப்பி நிலைத்திருக்குமோ அப்படி முள்ளிவாய்க்கால் மண்ணில் கொல் லப்பட்ட தமிழ் மக்களின் நினைவுகளும் எமது நெஞ்சங்களில் அழியாத நினைவுகளாக இருக்க வேண்டும் என்றும் அந்த மக்களின் நீதிக்காகவும் விடுதலைக்காகவும் தொடர்ந்து உழைப்போம் என்றும் ஈழத்தவர்கள் அதில் உறுதியெடுத்துக்கொண்டனர் என்று தெரி விக் கப்பட்டது. (த)

## மல்லாகம், தெல்லிப்பழையில் திருட்டுப் பேர்வழிகளால் அச்சம்

தெல்லிப்பழை, மே 11
தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல்லாகம், தெல் லிப்பழை ஆகிய பகுதிகளில் ஊரடங்கிலும் வழிப்பறிக் கொள்ளை மற்றும் களவு என்பன அதிகரித்து வருகின் றன என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வியாழக்கிழமை மல்லாகம் தொந்தனை வீதியில் அதிகாலை வாள்களுடன் வீடுபுகுந்த கும்பல் ஒன்று மோட்டார் சைக்கிளை எடுத்துச் சென்றது. அதை அவர் கள் கொண்டுசென்றுகொண்டிருந்தபோது ஏனையவர் கள் கண்டதால் இடைவழியில் விட்டுச் சென்றுவிட்டனர். அவர்கள் வைத்திருந்த வாள்களையும் எறிந்துவிட்டுச் சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தெல்லிப்பழைப் பொலிஸாருக்கு அதுபற்றி அறிவிக்கப் பட்டது. பொலிஸார் மோட்டார் சைக்கிள், சைக்கிள் மற்றும் வாள்களை மீட்டு விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்று மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, புகையிரத வீதிக்கு அருகாமையிலுள்ள வீட்டினுள் புகைபோக்கி வழியாக உள்நுழைந்த திருடர் கள் தண்ணீர் இறைக்கும் மின்மோட்டரை திருடிச் சென் றுள்ளனர். இதுபற்றி தெல்லிப்பழை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

இவை மட்டுமன்றி, தோட்டங்கள் மற்றும் இன்னும் பல வீடுகளில் வைக்கப்படும் கத்தி மற்றும் விவசாய உபகர ணங்களையும் திருடிச்சென்றுவிடுகின்றனர் என்றும் அந்தப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மல்லாகம் கட்டுவன் முனியப்ப கோவிலடியில் முதிய வரிடம் அக்கறையோடு கதைப்பதுபோல் பாசாங்கு செய்து அவர் வைத்திருந்த 7ஆயிரம் ரூபா பணத்தைப் பறித்துச் சென்றுள்ளது ஒரு குழு.


‘கொவிட் 19’ அசாதாரண சூழ்நிலை காரணமாக மக்கள் தொழிலின்றி, வருமானமின்றி கஷ்டப்படும் நிலையில், வீடுகளுக்குள் முடங்கிப் போயிருக்கும் நிலையில் இத்த கைய சம்பவங்கள் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்து கின்றன. இவை தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த)

## தாக்குதல் பற்றி விசாரணை இன்னுமில்லை

முல்லைத்தீவு, மே 11
முல்லைத்தீவு குமுழமுனை பிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபர் தண்ணிமுறிப்பிலுள்ள அவருடைய வயல் கொட்டிலில் வைத்துத் தாக்கப்பட்டமை பற்றி முல்லைத் தீவு பொலிஸில் முறையிட்டும் விசாரணை நடத்தப்பட வில்லை என்று பாதிக்கப்பட்ட தரப்பினர் கவலை தெரி விக்கின்றனர்.

கடந்த முதலாம் திகதி தாக்குதல் நடத்தப்பட்டிருந்தது. அதே இடத்தைச் சேர்ந்த ச.தனபாலசிங்கம்(வயது-67) என்பவரே தாக்கப்பட்டிருந்தார். படுகாயமடைந்த அவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் சேர்க்கப்பட் டுள்ளார்.

ஒரு வாரம் கடந்துவிட்டபோதும் தாக்குதல் தொடர்பில் எதுவித விசாரணையும் நடத்தப்படவில்லை என்றும் இளைஞர் ஒருவரே தாக்கியுள்ளார் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (த-19)



## மதியபோசனம் வழங்கப்பட்டது

கொடிகாமம், மே 11
மறைந்த ரெலோ தலைவர் சிறீ சபாரத்தினம் மற்றும் போராளிகள் பொதுமக்களின் 34 ஆம் ஆண்டு நினைவுநாளில் மதியபோசனம் வழங் கப்பட்டதோடு அஞ்சலியும் நடைபெற்றது.

கோப்பாய் அன்னை திரேசா கன்னியர்மட முதி யோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு சிறீ சபா ரத்தினம் அறக்கட்டளையினரால் கடந்த வாரம் மதியபோசனம்வழங்கப்பட்டது. இதற்கெனரெலோ கட்சியின் ஜேர்மன் கிளை முக்கியஸ்தர் திருமதி நிர்மலா ரஞ்சித் 20ஆயிரம் ரூபா வழங்கியி ருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (த-159)

## மதகுவைத்தகுளம் பகுதியில் சட்டவிரோதமாக காடழிப்பு

### தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை



முல்லைத்தீவு, மே 11
முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிர தேச செயலகத்துக்குட்பட்ட மாங் குளம் கிராமஅலுவலர் பிரிவுக் குட்பட்ட மதகுவைத்த குளத்துக்கு மேற்குப்புற காடு, ஊரடங்கு காலத்தில் பெருமளவில் அழிக் கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

காடழித்தவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை. தொடர்ந்தும் அந்தப் பகுதியில் காடழிப்பு இடம் பெறுகின்றது என்றும் தெரிவிக் கப்படுகின்றது. காணி பிடிப்பதை நோக்காகக்கொண்டு செயற்படும் குழுவே இந்த நடவடிக்கையில் ஈடு பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படு வதோடு அவர்கள் கைதுசெய்யப் படவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்படுகின்றது. (த-222)

# தண்டப் பணம் செலுத்துவதற்கான நிவாரண காலம் நீடிக்கப்பட்டுள்ளது

**கொழும்பு, மே 11**

**கொரோனாவால் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தமையால் செலுத்த முடியாமல்போன, போக்குவரத்து விதிமீறல் தண்டப்பணத்தை எந்தவித மேலதிக தண்டப்பணமுமின்றி எதிர்வரும் 29ஆம் திகதிவரை செலுத்துவதற்கு நிவாரணக் காலம் மேலும் நீடிக்கப் பட்டுள்ளது.**

இது தொடர்பாக தபால் மா அதிபர் ரஞ்சித் ஆரியரத்ன விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டதால் செலுத்த முடியாமல்போன போக்குவரத்து விதி மீறல் தண்டப்பணத்தை மேலதிக தண்டப்பணமின்றி செலுத்துவதற்கு பொலிஸ்மா அதிபரின் உடன்பாட்டில் நிதியமைச்சின் செயலரின் அனுமதியின்கீழ் கடந்த 2ஆம் திகதி வரையில் நிவாரண காலத்தை வழங்குவதற்கு தபால் திணைக்களத்தினால் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

இந்த நிவாரண காலத்தில் போக்குவரத்து விதிமீறல் தண்டப்பணத்தை பொறுப்பேற்றல் பணி, மேல் மாகாணம், புத்தளம் மாவட்டம் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பணிகளுக்காக மூடப்பட்ட பிரதேசங்கள் தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களில் தபால் மற்றும் உபதபால் அலுவலகங்கள் மூலம் மேற் கொள்ளப்பட்டது.

இருப்பினும் ஏப்ரல் 29ஆம் திகதி தொடக்கம் கடந்த 4ஆம் திகதி வரையில் மீண்டும் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டமை மற்றும் மேல்மாகாணம், புத்தளம் மாவட்டம் உள்ளிட்ட தனிமைப்படுத்தல் நடவடிக்கைளுக்காக மூடப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ள தபால் மற்றும் உப தபால் அலுவலகங்கள் மூலம் போக்குவரத்து விதி மீறல் தண்டப்பணத்தை செலுத்துவதற்காக இது வரையில் பொதுமக்களுக்கு சந்தர்ப்பம் கிட்டவில்லை. கடந்த 2ஆம் திகதி வரையில் வழங்கப்பட்ட நிவாரணக் காலத்திற்காக மேலதிக நிவாரண காலத்தை இன்று தொடக்கம் எதிர்வரும் 29ஆம் திகதி வரையில் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

இதற்கமைவாக மார்ச் முதலாம் திகதி அல்லது அதன் பின்னர் வழங்கப்பட்ட போக்குவரத்து விதி மீறல் தண்டப்பணத்தை மேலதிக தண்டப்பணமின்றி செலுத்துவதற்கு நிவாரணக் காலம் உரித்தாகும்.

இதேபோன்று பெப்ரவரி 16ஆம் திகதி தொடக்கம் பெப்ரவரி 29ஆம் திகதி வரையில் வழங்கப்பட்டுள்ள போக்குவரத்து விதிமீறல் தண்டப் பண ஆவண கட்டணத்தை 28 நாள்களுக்குள் செலுத்துவதற்காக நிறைவேற்றப்பட்ட தண்டப்பணத்துடன் போக்குவரத்து விதிமீறல் தண்டப்பணத்தை பொறுப்பேற்பதற்கு நிவாரண கால அவகாசம் கிடைக்கும்.

இன்று தொடக்கம் நாட்டின் அனைத்து தபால் அலுவலகங்கள் வழமையான நடவடிக்கைளுக்காக திறக்கப்படும் என்பதால் இதனை தடையின்றி செலுத்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது, என்றுள்ளது. (ஒ,5)

# தேர்தலை நடத்தினால் அதுவே தொற்று பரவுவதை அதிகரிக்கும்

## முன்னாள் பிரதியமைச்சர் தெரிவிப்பு

மூதூர், மே 11

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலையில் தற்போது தேர்தலை நடத்தினால் அது கொரோனாத் தொற்று பரவுவதை அதிகரிக்கும் 3ஆம் உலக மகாயுத்தம் போன்று நாட்டு நிலைமைகள் மாறியிருக்கின்றன. இந்த நிலையில் தேர்தல் ஒன்று முக்கியமல்ல என முன்னாள் பிரதியமைச்சர் அப்துல்லா மஃறூப் தெரிவித்தார்.

கிண்ணியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

இரு பிரதான ஊடகங்கள் முஸ்லிம்கள் மீது 'கொவிட்19' தொடர்பில் பிழையான கருத்துக்களை வெளியிட்ட போதும் அரசாங்கம் அதைக் கண்டு கொள்ளவில்லை உலகில் 120க்கும் மேற்பட்ட நாடுகளில் 70 நாடுகளில் கொரோனா மூலம் உயிரிழந்த ஜனாசாக்களை அடக்கம் செய்ய முடியும் எனக் கூறியபோதும் அதை இங்கு ஏற்காமல் முஸ்லிம்களின் மனதை நோகடிக்கிறார்கள். இந்த நாட்டைப் பொறுத்தமட்டில் முறையாக 225 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் முன்னாள் சபாநாயகர் ஊடாக நாடாளுமன்றத்தை ஜனாதிபதி தலைமையில் கூட்டிப் பேசியிருக்க வேண்டும். இதனால் எந்த நஷ்டங்களும் ஏற்படாது. சம்பளத்தையோ சலுகைகளையோ எதிர்பார்க்கமாட்டோம். நாட்டின் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டி சுமுகமான நிலை ஏற்படுமாயின் தேர்தலைத் தயார்படுத்தலாம். தேர்தலை மட்டுப்படுத்த முடியாது அன்றைய ஜனாதிபதித் தேர்தலின் போது பிரதான வேட்பாளர்களாக கோத்தாபய ராஜபக்ச, சஜித் பிரேமதாச, அநுரகுமார திஸாநாயக்க போன்றோர்களே இருந்தனர். தற்போதைய தேர்தலின்படி மாவட்ட ரீதியாக ஒரு கட்சியில் இருந்து ஏழுபேர் உட்பட திருகோணமலையில் மாத்திரம் 160 க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் உள்ளார்கள். இவ்வாறு இருக்க தேர்தல் பரப்புரைகளை முன்னெடுத்தால் தொற்று நோய் பரவுவதை அதிகரிக்கும். 225 நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆலோசனைகளைக் கொண்டு சமூக ஒற்றுமைக்காக சகல இன மத மக்களும் ஒன்றாக வாழ்வதற்கு ஜனாதிபதி இந்தத் தருணத்தில் எங்களது ஆலோசனைகளைக் கேட்டு நடக்க வேண்டும்- என்றார்.

(ப)

# குடிவரவு, குடியகல்வு திணைக்களம் திறப்பு

கொழும்பு, மே 11

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களத்தின் அன்றாட நடவடிக்கைகள் இன்று திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்படும் என்று அந்தத் திணைக்களம் அறிவித்துள்ளது.

குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் பொது விடுமுறை நாள்களைத் தவிர, ஏனைய நாள்களில் திறந்திருக்கும் என்பதோடு, சேவைகளை பெற்றுக்கொள்வதற்காக வருகை தரும் பொதுமக்கள் ஊரடங்கு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்ட நடைமுறைகளையும் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளையும் பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒருநாள் சேவையின் கீழ் கடவுச்சீட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை ஒப்படைக்கும் நடவடிக்கை காலை 8 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை முன்னெடுக்கப்படும்.

சாதாரண சேவையின் கீழ், கடவுச்சீட்டுகளை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பப்படி வங்களை ஒப்படைக்கும் நடவடிக்கை காலை 9 மணி முதல் பிற்பகல் 2 மணி வரை முன்னெடுக்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்தோடு கடவுச்சீட்டு தகவல்களில் திருத்தம், குடியுரிமையைப் பதிவு செய்தல், இந்திய மற்றும் சீன வம்சாவளியைச் சேர்ந்த நபர்களின் குடியுரிமை தொடர்பான விடயங்கள், கடவுச்சீட்டு தரவுப் பக்கத்தில் தகவல்களை உள்ளீடு செய்தல் மற்றும் கடவுச்சீட்டு தரவுப் பக்கம் மற்றும் ஏனைய பக்கங்களின் அரபு மொழி பெயர்ப்பை பெற்றுக்கொள்ளுதல் உள்ளிட்ட நடவடிக்கைகள் காலை 9 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை முன்னெடுக்கப்படும் என்று குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

(ஒ,5,22)

# மட்டக்களப்பில் கிருமி நீக்கல்

மட்டக்களப்பு,மே 11

மட்டக்களப்பு மாநகரத்துக்குட்பட்ட பிரதான இடங்களில் கிருமி நீக்கி விசிறும் செயற்பாடு நேற்று முன்னெடு க்கப் பட்டது.

மாநகரசபையினர் மற்றும் பொலிஸார் இணைந்து இந்தச் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

பஸ் நிலையம், காந்திபூங்கா, வர்த்தக நிலையங்கள் உள்ளிட்ட பிரதான இடங்கள் அனைத்தும் தொற்று நீக்கப்பட்டன. (க-47)

# நாடு வழமைக்குத் திரும்பும்போது மக்கள் கடைப்பிடிக்க வேண்டியவை

## கிளி.மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் அறிவித்தல்

கிளிநொச்சி, மே 11

கொரோனாவில் இருந்து நாடு மீண்டும் வழமைக்குத் திரும்பும் செயற்பாடுகள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் ராகுலன் பொதுமக்களுக்கு பின்வரும் சுகாதார நடைமுறைகளை அறிவித்தல் விடுத்துள்ளார்.

மக்களின் வாழ்வாதாரத்தையும் சரிவடைந்த பொருளாதாரத்தையும் சுகாதார நெறிமுறைகளினூடாக கட்டியெழுப்பும் பொருட்டு இன்று நாட்டின் செயற்பாடுகள் யாவும் வழமைக்கு திரும்ப உள்ளன. உலகளாவிய பெரும் கரிசனையும் நாடளாவிய சுகாதார முன்னுரிமையுமான கொவிட் 19 தொற்றுநோய் தாக்கத்திலிருந்து பாதுகாப்பினை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக தொடர்ந்தும் தனிமனித சுகாதார நடவடிக்கைகளைப் பின்பற்றுவதுடன் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்களை தவறாது கடைப்பிடித்து ஒத்துழைப்பு நல்குமாறு கேட்டுக் கொள்வதோடு இதுவரை காலமும் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி நடந்து கொண்டதாலும், தனிநபர் சுகாதாரம் மற்றும் ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடித்து பொதுமக்கள் ஒத்துழைத்ததன் மூலமும் சுகாதாரத் திணைக்களம், மாவட்டச் செயலர் பணிமனை, பிரதேச செயலாளர் பணிமனை, பிரதேசசபை, தனியார் திணைக்களங்கள், பொலிஸ் திணைக்களம், பாதுகாப்புத் திணைக்களத்தின் மெச்சுதற்குரிய சேவைகளின் ஊடாக கொரோனா தொற்று கண்டறியப்படாத மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் இதுவரையில் இருந்துவருகின்றமை மகிழ்ச்சியளிக்கின்றது.



இனிவரும் காலம் மாவட்ட எல்லைகள் திறக்கப்படவுள்ளமையினால் அதிகளவில் மக்கள் தேவைகளை பூர்த்தி செய்தல் பொருட்டு சமூகச் செயற்பாடுகளுக்கு வருகை தருவர். ஏனைய மாவட்டங்களிலிருந்தும் பலர் வருகைதருவதனையும் சென்று வருவதையும் காண முடியும். எனவே தொடர்ந்தும் நாம் சுகாதார அறிவுறுத்தல்களைப் பின்பற்றி விழிப்புடன் செயற்படுவதுடன் தனியாள் இடைவெளி, முகக்கவ சங்களைப் பாவித்தல், அநாவசியமற்ற முறையில் பயணம் செய்வதை தவிர்த்தல், அநாவசியமற்ற பிறமாவட்ட பயணங்களை தவிர்த்தல், அநாவசியமற்ற கொண்டாட்டங்களைத் தவிர்த்தல், அநாவசியமற்று கூட்டம் கூடுவதை தவிர்த்தல், அடிக்கடி கை கழுவுதல், அலுவலகங்களில் தனியாள் இடைவெளியுடனான சேவையினைப் பெற்றுக்கொள்ளல் போன்ற செயற்பாடுளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறது - என்றார். (ப-214)

## பணிபுரியும் இடத்தில் அல்லது அலுவலகங்களில் கடைப்பிடிக்க வேண்டியவை

வைத்திய கலாநிதி. கோ.றஜீவ்
(பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.)


பகுதி- 2

# கொரோனாவுடன் வாழப் பழகுவோம்

- கொவிட் 19 தொற்று பரவுவதைத் தடுக்கும் முகமாக தயார்நிலைத் திட்டம் ஒன்றை பணிபுரியும் இடத்தி தயார் செய்யுங்கள்.
- கை கழுவுவதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.
- பணிபுரியும் இடத்தினுள் நுழைய முன் உங்கள் கைகளை சவர்க்கார மிட்டு 20 நொடிகளுக்கு நன்றாக கழுவுங்கள்.
- முகக் கவசத்தை சரியான முறையில் அணிந்து கொள்ளுங்கள்.
- நீங்கள் இருமும் போது அல்லது தும்மும் போது உங்கள் முழங்கையின் உட்புறத்தினால் அல்லது ரிசுக் கடதாசியினால் மூடிக்கொள்ளுங்கள்.
- எப்போதும் ஒரு மீற்றர் தூரத்தினை பேணிக்கொள்ளுங்கள்.
- அலுவலகத் தளபாடங்களின் மேற்பரப்புகள், அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகள், போன்றவற்றை அடிக்கடி தொற்று நீக்கிகளைப் பாவித்து சுத்தப்படுத்தவும்.
- கதவு போன்றவற்றை திறந்து மூடும்போது கைகளால் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- வளிசீராக்கிகளை (Air conditioner) பயன்படுத்தாது அறைகளின் யன்னல், கதவுகளைத் திறந்து வைத்துக்கொள்ளுங்கள்.
- வீட்டில் இருந்தபடியே அலுவலக வேலைகளைச் செய்வதற்கு ஊக்கப்படுத்துங்கள்.
- அலுவலகங்களில் அல்லது பணிபுரியும் இடங்களில் வழக்கமாக பணிபுரிவோரின் 1/3 அல்லது 50 வீதம் மட்டும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வேலையில் ஈடுபடுமாறு ஆயத்தப்படுத்துதல்.
- அலுவலகக் கூட்டங்களை நடத்தும் போது தொலைத்தொடர்பு சாதனங்கள் மூலம் நடத்துதல்.
- தேநீர் மற்றும் மதிய உணவு வேளைகளில் அனைவரும் ஒன்று கூடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- ஒவ்வொரு நபரும் பாவிக்கும் கோப்பை அல்லது தட்டு போன்றவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- அலுவலகத் தொடர்பாடல் சாதனங்கள் மூலம் அடிக்கடி உடல் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பான செயல் முறைகள் பற்றி அறிவுறுத்தல்களை வழங்குங்கள்.
- முகக் கவசங்களை பாவனையின் பின் பாதுகாப்பான முறையில் மூடக்கூடிய குப்பைத்தொட்டியில் அப்புறப்படுத்துங்கள்.
- பணிபுரியுமிடத்திலிருந்து அல்லது அலுவலகத்திலிருந்து வெளியேறுவதற்கு முன் கைகளை சவர்க்கார மிட்டு 20 வினாடிகளுக்காவது நன்கு கழுவுங்கள்.
- இயலுமானவரை உடனடியாக வீடு திரும்புங்கள்.

### தவிர்க்கப்பட வேண்டியவை

- ஒருவரையொருவர் தழுவிக் கொள்வதையோ கைகுலுக்குவதையோ தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புக்களைத் தொடுவதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.(உ.ம் படிக்கட்டுகளின் கைப்பிடிகள், கதவுப்பிடிகள்)
- பேனாக்கள், தட்டுகள்,கோப்பைகள் போன்றவற்றை பிறருடன் பகிர்ந்து கொள்ள வேண்டாம்.
- உங்களுக்குத் தடிமன், இருமல் போன்ற நோய் அறிகுறிகள் இருப்பின் நீங்கள் பணிபுரியும் இடத்திற்குச் செல்வதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- வாய், மூக்கு மற்றும் கண்கள் போன்ற பகுதிகளைத் தொடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.



## மின்உயர்த்திகளை பாவிக்கும் போது கடைப்பிடிக்க வேண்டியவை

- எப்பொழுதும் படிக்கட்டுகளைப் பாவிக்க முயற்சி செய்யுங்கள்.
- உயர்த்தியின் பொத்தான்களை அழுத்தும்போது உங்கள் முழங்கையை அல்லது ரிசுக் கடதாசியை அல்லது பல்குத்தியொன்றைப் பாவிக்கவும்.
- உங்கள் முகக் கவசத்தை சரியான முறையில் அணியுங்கள்.
- எப்பொழுதும் மின் உயர்த்தி பாவிக்கும் நபர்களின் எண்ணிக்கை குறைவான நேரங்களில் அதனை பாவிக்க முற்படுங்கள் அல்லது உங்கள் வாய்ப்பு வரும்வரை காத்திருங்கள்.
- எப்பொழுதும் பாவித்த முகக் கவசம், ரிசுக் கடதாசி அல்லது பல்குத்தி போன்றவற்றை பாதுகாப்பான முறையில் மூடக்கூடிய குப்பைத்தொட்டி ஒன்றினுள் அப்புறப்படுத்துங்கள்.
- மின் உயர்த்தியைப் பாவித்த பின் உங்கள் கைகளை சவர்க்காரமிட்டு ஆகக் குறைந்தது 20 வினாடிகளுக்காவது கழுவுங்கள்.
- அடிக்கடி தொடப்படும் மேற்பரப்புகள் சேவை வழங்குனரால் அடிக்கடி தொற்றுநீக்கம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

### தவிர்க்கப்பட வேண்டியவை

- உங்கள் மூக்கு வாய் மற்றும் கண்களைத் தொடுவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள்.
- உங்கள் முகக் கவசத்தைத் தொடவேண்டாம்.

---

*கொரோனாவுக்கு முடிவு...*

யாகக் கடைப்பிடித்து இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் திரும்ப வேண்டும். கொரோனாத் தொற்றுக்கு முடிவு கட்ட வேண்டும். இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இன்றிலிருந்து சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களை மக்கள் முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும். பொது இடங்களில் கூட்டங்கள் கூடுவதைத் தவிர்க்க வேண்டும்.

கொரோனா நோய் அறிகுறியின்றி யாரிடம் இருக்கின்றது என்பது தெரியாது. எனவே, எமது மக்கள் சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்க வேண்டும்.

தற்போதைக்கு அரச தனியார் வேலைத் தளங்களுக்கும், அத்தியாவசிய தேவைகளுக்கும் மட்டும் மக்கள் வீடுகளிலிருந்து வெளியே செல்ல வேண்டும். தேவையற்ற அநாவசியமற்ற பயணங்களை மக்கள் தவிர்க்க வேண்டும். அலுவலங்களில் பணிபுரிவோர் அங்கு குவிந்திருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

கொரோனாவிருந்து குணமடைந்தவர்கள்கூட மீண்டும் நோய்த்தொற்றுக்கு இலக்காகுகின்றனர். எனவே, மக்கள் வீடுகளுக்குள்ளும், வெளியில் நடமாடும் போதும் சுகாதாரப் பிரிவினரின் வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடிக்க வேண்டும் என மீண்டும் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம். இந்த நோய் எமது அசண்டையீனத்தால் சமூகத் தொற்றாக உருவெடுத்தால் இத்தாலி, அமெரிக்கா போன்ற உலக நாடுகளில் ஏற்பட்டுள்ள மனிதப் பேரழிவுகளை எமது நாடும் சந்திக்க வேண்டிவரும். இதை உணர்ந்து நாம் அனைவரும் செயற்பட வேண்டும் என்றார். (ஓ.5,22)

*கொரோனா ஒழியவில்லை...*

நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். ஊரடங்குச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும்.

இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் நேற்று அவர் தெரிவித்துள்ளதாவது

திங்கட்கிழமை முதல் நாட்டில் இயல்பு நிலையை படிப்படியாக ஏற்படுத்தும் முயற்சிகளுக்கு மக்கள் ஆதரவளிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவுவது குறிப்பிடத்தக்க அளவுக்கு நாட்டில் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நிலையில் அரசு ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தும் நடவடிக்கைகளை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

நாளை (இன்று) முதல் அரச தனியார் துறையினர் குறிப்பிடத்தக்க அளவிலான பணியாளர்களுடன் தமது பணிகளை ஆரம்பிப்பார்கள்.

ரயில் மற்றும் பேருந்துகளில் பயணம் செய்பவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்படும். பாடசாலைகளும் தனியார் வகுப்புகளும் தொடர்ந்து மூடப்பட்டிருக்கும். கட்டம் கட்டமாக பணிகளை ஆரம்பிக்கும்போது தனிநபர் விலகல் நடவடிக்கைகளை மக்கள் பின்பற்ற வேண்டும்.

சில மாவட்டங்களில் ஊரடங்கு தளர்த்தப்பட்டவேளை மக்கள் தனிநபர் விலகல் நடவடிக்கைகளை பின்பற்றவில்லை. எனினும், அதன் பின்னர் மக்கள் தனிநபர் விலகல் நடவடிக்கைகளின் அவசியத்தை உணர்ந்துகொண்டனர்.

ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்திய பின்னரும் மக்கள் தனிநபர் விலகல் குறித்து அவதானமாகயிருக்க வேண்டும். ஏனெனில், கொரோனா வைரஸ் பரவல் குறிப்பிடத்தக்க அளவே கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆனால், இன்னமும் முற்றாக ஒழிக்கப்படவில்லை. இயல்பு நிலையை ஏற்படுத்திய பின்னரும் சில இடங்களில் முடக்கல் நிலையை நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும். ஊரடங்கை அமுல்படுத்த வேண்டியிருக்கும்.- என்றார். (ஏ-22)

# கொரோனாத் தகவல்களை அரசு மறைக்கவேயில்லை!

## அமைச்சரவை இணைப்பேச்சாளர் கருத்து

**கொழும்பு, மே 11**

**கொரோனா விவகாரம் தொடர்பான எந்தவொரு தகவலையும் அரசு மறைக்கவில்லை என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரும், அமைச்சருமான ரமேஷ் பத்திரண தெரிவித்தார்.**

கொரோனா தொடர்பான உண்மையான தரவுகளை அரசு மறைப்பதாக எதிரணி உறுப்பினர்களால் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டு குறித்து வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

"தகவலை அறிந்து கொள்வதற்கான உரிமை இலங்கையில் சிறந்த மட்டத்தில் உள்ளது. எனவே, கொரோனா தொடர்பில் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் நபர் முதல் அனைத்து தகவல்களையும் அரசு அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னரே சமூக ஊடகங்கள் ஊடாக மக்கள் அறிந்து கொள்கின்றனர். ஆகவே, போலியான தகவல்களைக் கூறமுடியாது.

அதேபோல் தகவல்களை மூடிமறைப்பதற்கான எந்தவொரு தேவைப்பாடும் அரசுக்கு கிடையாது. எவ்வித அடிப்படையும் இன்றியே இப்படியான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன.

அத்துடன், சுகாதாரத் தரப்புகளால் முன்வைக்கப்படும் ஆலோசனைகளின் பிரகாரமே அரசு தீர்மானங்களை எடுத்துவருகின்றது. எனவே, தன்னிச்சையான முறையில் தீர்மானம் எடுக்கப்படுவதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகளையும் ஏற்கமுடியாது. அவற்றை நிராகரிக்கின்றோம்" என்றும் அவர் கூறினார். (ஒ,5)

# கட்டுப்பாடுகளுடனே இலங்கை விடுவிப்பு

## சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, மே 11

மக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்குக் கொண்டு வரும் நோக்கில் கட்டுப்பாடுகளுடன் இன்றிலிருந்து நாடு விடுவிக்கப்படவுள்ளது என்பதனை நாட்டில்கொரோனா முழுமையாக ஒழிக்கப்பட்டுள்ளதாகக் கருதிவிடக் கூடாது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

வைரஸ் பரவல் காரணமாக முன்னெடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். இந்த சந்தர்ப்பத்தில் அன்றாட நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் அரச மற்றும் தனியார் திணைக்களங்கள் மிகுந்த பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் அனில் ஜாசிங்க மேலும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

கட்டுப்பாடுகளுடன் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் விடுவிக்கப்படவுள்ளன. முழுமையான கொரோனா வைரஸ் பரவலுக்குள் நாம் வாழ்ந்த முறைபற்றி அனைவரும் அறிவோம். இதன் போது நாம் இது வரையில் பயன்படுத்தியிராத வசனங்கள் பலவற்றையும் பயன்படுத்தினோம். இவ்வாறான நிலையிலும் கொரோனா கட்டுப்படுத்தலுக்கான நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுத்தல் அத்தியாவசியமானதாகும். இலங்கையில் கொரோனா வைரஸ் முற்றாக ஒழிப்பட்டுள்ளது என்பது இதன் அர்த்தமல்ல. இதற்கு நீண்ட காலம் எடுக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

அண்மைக்காலமாக அதாவது கடந்த 2 தொடக்கம் 3 மாதங்களுக்கு இடையில் எம்மால் பின்பற்றப்பட்ட நடவடிக்கைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதற்காக எம்மால் வெளியிடப்பட்டுள்ள ஆலோசனை வழிகாட்டல்கள் சட்டத்திற்குட்பட்ட விதிமுறைகள் என்பன தனிமைப்படுத்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தொடர்ந்தும் நடைமுறையிலிருக்கும். அதன்படி செயற்படும் போது அரச திணைக்களங்கள், தனியார் திணைக்களங்கள் பெரிய விற்பனை நிலையங்கள் சிறு விற்பனை நிலையங்கள் அதே போன்று பொதுப் போக்குவரத்து என்பன பொறுப்புடன் செயற்பட வேண்டும். அதே போன்று குறிப்பிட்ட ளவு நோயாளர்கள் இனங்காணப்படலாம். அவ்வாறு இனங்காணப்படும் போது எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றிய நடவடிக்கைகள் சுகாதார அமைச்சால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

தற்போது வரையும் தடிமன், காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகள் காணப்பட்டால் எம்மால் குறிப்பிடப்பட்டுள்ள மருத்துவமனைக்குச் செல்லுமாறு அல்லது 1390 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறியத்தருமாறு கோருகின்றோம் - என்றார். (ஒ,5)



# சுகாதார அமைச்சுக்கு செயலராக படையதிகாரி

கொழும்பு, மே 11

சுகாதார அமைச்சின் செயலாளராக, இராணுவ சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளரான மேஜர் ஜெனரல் சஞ்ஜீவ முனசிங்க நியமிக்கப்படவுள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா ஒழிப்பு நடவடிக்கையை இன்னும் தீவிரமாக்கும் நோக்கிலேயே அவர் இந்தப் பதவிக்கு நியமிக்கப்படவுள்ளார் எனக் கூறப்படுகின்றது. (அ)

# பொருளாதாரத்தை கட்டியெழுப்பவே நாடு மீண்டும் திறக்கப்படுகின்றது

## சுகாதார அமைச்சர் பவித்திரா தெரிவிப்பு

கொழும்பு, மே 11

நாட்டின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காகவே நாடு முழுவதும் இன்று முதல் நிர்வாக செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்காக அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதன் கீழ் அரச மற்றும் தனியார் துறைகளை திறக்கும் நடவடிக்கை இன்று தொடக்கம் ஆரம்பமாகவுள்ளது. இந்தச் சந்தர்ப்பத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கு அன்றி வேறு எந்தவித நடவடிக்கைகளுக்காகவும் பொதுமக்கள் வீடுகளிலிருந்து வெளியேறி நகரங்களுக்கு வருவதை தவிர்த்துக் கொள்ளவேண்டும் என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

இன்றைய தினம் நாட்டில் நிர்வாக நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் மூலம் அரசு எதிர்பார்ப்பது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கத்தை மட்டுமேயாகும் என்று தெரிவித்த அமைச்சர் இதனால் பொதுமக்கள் பொறுப்புடன் செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

கடந்த வாரத்தில் சமூகத்தின் மத்தியில் கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகவில்லை என்பதை கவனத்தில் கொண்டே அரசு மீண்டும் நாட்டில் பகுதியளவிலான நிர்வாகப் பணிகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்தது என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விசேடமாக கொழும்பு 12 பண்டாரநாயக்க மாவத்தை மற்றும் சுதுவெல்ல போன்ற பகுதிகளில் கடந்த வாரத்தில் கொரோனா தொற்று நோயாளர்கள் பதிவாகவில்லை. வெலிசறை கடற்படை முகாமில் பாதிக்கப்பட்ட கடற்படையினர் மற்றும் அவர்களுடன் நெருக்கமாக தொடர்பு கொண்டிருந்தவர்கள் மாத்திரமே நோயாளர்களாக அடையாளங் காணப்பட்டனர். இவர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர்.

இன்று நாட்டில் வழமை நிலை இடம்பெறுவதாக கூறி இவர்கள் வீடுகளில் இருந்து வெளியேறக்கூடாது என்றும் அவர் குறிப்பிட்டார். இதேபோன்று அத்தியாவசிய தேவைகளுக்கு மாத்திரம் வெளியேறுவது பொருத்தமாகும். தற்பொழுது இந்த கொரோனா வைரஸ் தொற்றை தடுப்பதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள நடவடிக்கைளுக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது மிக முக்கியமாகும் என்று அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ஒ,5)

# இராணுவத்தை பாதுகாக்கவும்

## இராணுவத்தின் முன்னாள் ஊடக பேச்சாளர் வேண்டுகோள்

கொழும்பு, மே 11

கொரோனாவிலிருந்து மக்களை பாதுகாப்பதற்குத் தேவையான முதற்கட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள இராணுவத்தினரின் பாதுகாப்புக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் பெற்றுக் கொடுக்குமாறு இராணுவத்தின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சுமித் அத்தபத்து தெரிவித்தார்.

எதிர்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவைத் தடுப்பதற்காக அரசு முன்னெடுத்துவரும் செயற்பாடுகளில் இராணுவத்தினர் முன்களப் பணியாற்றுகின்றனர். அவர்கள் அதன் காரணமாக தொற்றுக்கு உள்ளாகியும் உள்ளனர். நாட்டு மக்களைப் பாதுகாப்பதற்காகச் செயற்பட்டு வரும் இராணுவத்தினரைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.

அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்களை அரசு பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். போரின் போது ஆயுதங்கள் வழங்கப்படுவது போல் தற்போது வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு அவசியமான உபகரணங்கள் பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

இராணுவத்தினரின் செயற்பாடுகள் தொடர்பில் அவர்களை மதிப்பளிப்பதுடன் இராணுவத்தினரின் விடுமுறை தொடர்பிலும் அரசு சிந்தித்து செயற்பட வேண்டும். ஏனென்றால் விடுமுறையின்றி தொழில் செய்வது என்பது கடினமான செயலாகும். போர்க் காலத்திலும் இராணுவத்தினருக்கு விடுமுறைகள் வழங்கப்பட்டன. தற்போது விடுமுறைகள் வழங்கப்படாமல் இருந்தால், இராணுவத்தினர் சொந்த வாழ்க்கையில் பல சிக்கல்களை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். இதனால் மன அழுத்தங்களுக்கு கூட அவர்கள் உள்ளாகலாம் என்றார். (ஒ,5)

# செப்ரெம்பர் மாதம் வரையில் தள்ளிப் போகுமா தேர்தல்?



கொழும்பு, மே 11

**அடுத்த மாதம் 20 ஆம் திகதி பொதுத்தேர்தலை நடத்தமுடியாமல் போனால் செப்ரெம்பர் மாதம் வரையில் ஒத்தி வைக்கப்படலாம் என்று நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.**

தற்போதைய நெருக்கடி சூழ்நிலையைக் கருத்திற் கொண்டு குறைந்தபட்சம் செப்ரெம்பர் வரையாவது தேர்தலை பிற்போடுமாறு எதிர்க்கட்சிகள் தேர்தல் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளன. 'தேர்தல் பரப்புரையை முன்னெடுப்பதற்கு ஐந்து வாரங்களாவது அவசியம். நாட்டில் தற்போது தனிமைப்படுத்தல் நடவடிக்கை இடம்பெற்றுவருகின்றது. 21 நாள்கள் கால எல்லை நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அது நிறைவடைவதற்கு மே நடுப்பகுதி தாண்டும். அத்துடன், ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்டாலும் நாட்டில் இயல்பு நிலை திரும்புவதற்கு சிறிது காலம் எடுக்கும்' எனவும் எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவை உட்பட மேலும் சில காரணிகளைக் கருத்திற்கொண்டே தேர்தலை ஒத்தி வைக்கும் முடிவு எடுக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் விசேட கலந்துரையாடலொன்று நாளை நடைபெறவுள்ளது. இதன்போது இது பற்றி இறுதி முடிவு எடுக்கப்படலாம் என்றும், சுகாதார தரப்பு உத்தரவாதம் வழங்கும் பட்சத்தில் திட்டமிட்ட அடிப்படையில் தேர்தல் நடத்தப்படலாம் எனவும் அறியமுடிகின்றது. (ஓ.5,44)

## குழியில் வீழ்ந்து சிறுவர்கள் சாவு

### பட்டம் விடுவதை பார்க்கச் சென்றவர்களாம்

சம்மாந்துறை, மே 11

பட்டம் விடுவதை பார்வையிடச் சென்ற சிறுவர்கள் பாதுகாப்பற்ற கிணறு போன்ற குழியில் தவறி வீழ்ந்து உயிரிழந்த சம்பவம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம் பெற்றுள்ளது.

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கிணற்றில் வீழ்ந்து உயிரிழந்த இரு சிறுவர்களது சடலங்களும் சம்மாந்துறை ஆதார மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

3 மற்றும் 6 வயதுடைய 2 குழந்தைகளே உயிரிழந்தவர்களாவர். உயிரிழந்த சிறுவர்களின் தாய் சிற்றுண்டி தயாரிப்பில் ஈடுபட்டிருந்தவேளை உயிரிழந்த சிறுவர்கள் இருவரும் அருகில் உள்ள சிறுவர்கள் பட்டம் விடுவதை பார்வையிட அப்பகுதிக்குச் சென்றுள்ளனர். இவ்வாறு சென்றபோதே குழியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ளனர். சிறுவர்கள் வீழ்ந்த கிணறு போன்ற குழி உள்ள பகுதி அவர்களின் வீட்டில் இருந்து 150 மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது. (ஓ.5)

## நிர்வாகச் செயற்பாடுகள் இன்று முதல் ஆரம்பம்!

கொழும்பு, மே 11

இரண்டு மாதங்களுக்கு மேலாக ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த கொழும்பு, கம்பஹா, களுத்துறை மற்றும் புத்தளம் அடங்கலாக நாடு முழுவதும் இன்று முதல் பகுதியளவில் நிர்வாக செயற்பாடுகளை ஆரம்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

நிர்வாக செயற்பாடுகள் பகுதியளவில் ஆரம்பிக்கப்பட்டாலும் ஊரடங்கு கட்டுப்பாடுகள் கடுமையாக பின்பற்றப்படும் எனவும், மாவட்டங்களுக்கிடையிலான போக்குவரத்துகள் தொடர்பில் கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனவும் பொலிஸார் அறிவித்துள்ளனர்.

சகல மாவட்டங்களிலும் இன்று காலை ஊரடங்கு தளர்த்தப்படவுள்ளதோடு புதிய ஊரடங்கு விதிகள் தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளன.

நிர்வாகச் செயற்பாடுகள் பகுதியளவில் ஆரம்பிக்கப்படுவதற்காக ரயில் நிலையங்கள், பஸ் தரிப்பிடங்கள், அலுவலகங்கள் என்பவற்றை கிருமி நாசினி விசிறி சுத்தம் செய்யும் பணிகள் கடந்த இரு தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அலுவலகங்களுக்கு வருவோர் சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களை பின்பற்றி நடக்குமாறும் கோரப்பட்டுள்ளது. (ஓ.5)

## மேலும் 1,500 அரச பஸ்கள் நாளை முதல் சேவையில்!

### மாவட்டங்களுக்குள் மட்டும் பயணம்



கொழும்பு, மே 11

இன்று திங்கட்கிழமை முதல் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான மேலும் ஆயிரத்து 500 பஸ்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளன.

ஊரடங்கு தளர்த்தப்படும் பகுதிகளுக்குள் பஸ் சேவைகள் முன்னெடுக்கப்படும் என்று இலங்கை போக்குவரத்துச் சபையின் பிரதி பொது முகாமையாளர் ஏ.எச். பண்டுக தெரிவித்துள்ளார். அலுவலக நேரங்களை அடிப்படையாகக் கொண்டு பஸ்கள் இயங்கவுள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

தேவையேற்படும் பட்சத்தில் கட்டணங்களை அறவிட்டு, அலுவலகங்களுக்குப் பிரத்தியேக சேவையை வழங்குவதற்கும் தயாராகவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

மாவட்டங்களுக்குள் பயணிப்பதற்கு மாத்திரமே அரசு அனுமதி வழங்கியுள்ளதாகவும் இலங்கை போக்குவரத்துச் சபை குறிப்பிட்டுள்ளது.

இதனைத் தவிர, மருத்துவமனைகளில் சுகாதார சேவை ஊழியர்களுக்கான போக்குவரத்துக்காக நாடு முழுவதும் 426 பஸ்களை ஈடுபடுத்தியுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை மேலும் கூறியுள்ளது. (ஓ.5,22)

## ஊரடங்கைத் தளர்த்துவது அரசியல் இலாபத்துக்கல்ல!

கொழும்பு, மே 11

அரசியல் நோக்கங்களை அடிப்படையாக கொண்டு அரசு செயற்படவில்லை. ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும் கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படும். இன்று திங்கட்கிழமை தொடக்கம் சேவையில் ஈடுபடவுள்ளவர்கள் பொறுப்புடன், பாதுகாப்புடன் செயற்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இவ்வாறு முன்னாள் ஆளும் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

பொதுமக்கள் முன்னணியின் காரியாலயத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா பரவல் ஒப்பீட்டளவில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. நோய் பரவல் பகுதிகளும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன. கொரோனா தாக்கத்தால் ஏற்பட்ட ஏனைய சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டிய தேவைகாணப்படுகின்றது. நடைமுறையிலுள்ள ஊரடங்கு இன்று திங்கட்கிழமை தளர்த்தப்பட்டவுள்ளது. அரச, தனியார் துறையினர் சேவையில் ஈடுபடுவதற்கான வழிமுறைகள் பாதுகாப்பு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு ஏற்படுத்திக்கொடுக்கப்பட்டுள்ளன. ஊரடங்கு தளர்த்தப்பட்டாலும், கொரோனா ஒழிப்புக்குக்கான நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படும். ஆகவேபொதுமக்கள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த காலத்தைக் காட்டிலும் பொறுப்புடன் செயற்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது, என்றார். (ஓ.5)

## வீதிகளில் பொதுமக்கள் கூட்டமாகச் செல்லமுடியாது

### இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு, மே 11

ஊரடங்குநடைமுறையிலுள்ள பகுதிகளில் பொதுமக்கள் வெளியே செல்வதற்கு அடையாள அட்டையைப் பயன்படுத்தும் விதம் குறித்து ஏற்கனவே அறிவிக்கப்பட்ட பிரகாரம் செல்லுமாறும் அதிகளவில் பொதுமக்கள் வீதிகளில் ஒன்றுகூட அனுமதிக்கப் போவதில்லை என்றும் இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச, தனியார் நிறுவனங்கள் பணியாளர்கள் பயணிப்பதற்காக போக்குவரத்து வசதிகள் ஏற்படுத்தி கொடுக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றைத் தனிப்பட்ட பயணங்களுக்கு பயன்படுத்தமுடியாது.

அருகில் உள்ள கடைகளுக்கு நடந்து சென்று பொருள்களைக் கொள்வனவு செய்து கொள்ள முடியும். தொற்றுப் பரவாதமுறையில் மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும், என்றார். (ஓ.5)

## அரசமைப்புச் சபையின் விசேட கூட்டம் இன்று

### தேர்தல்கள் ஆணைக்குழுவினரும் அழைப்பு

கொழும்பு, மே 11

அரசமைப்புச் சபையின் கூட்டம் அதன் தலைவர் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் இன்று பி.ப. 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இந்தக் கூட்டத்துக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் மூவரும் அழைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் கூட்டத்தில் சுயாதீன ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பில் ஆராயப்படவுள்ளன. கடந்த மாதம் 23 ஆம் திகதி இறுதியாக அரசமைப்புச் சபை கூடியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ.5,105)

# பெரும்துயர் துடைக்கும் கொடையாளர்கள்




மட்டக்களப்பு நாவிதன்வெளி பிரதேசத்தில் வசிக்கும் 100 குடும்பங்களுக்கு நளீர் பவுண்டேசனால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)




மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலம்பாவெளி, சவுக்கடி, தளவாய் ஆகிய கிராமங்களில் வாழும் 150 குடும்பங்களுக்கு ஆஸ்திரேலிய அன்பாலயம் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-150)




ஊரடங்கால் வாழ்வாதாரத்தை இழந்துள்ள மிருசுவில் மக்களுக்கு புனித நீக்கொலார் கழகத்தால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது. (ம)




கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவால் பாதிக்கப்பட்டுள்ள 100 குடும்பங்களுக்கு யாழ்ப்பாணம் கே.கே.பி இளைஞர் கழகத்தால் பால்மா மற்றும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)



கொரோனா ஊரடங்கால் பாதிக்கப்பட்ட 25 சிறப்புத் தேவையுடையவர்களுக்கு அத்தியாவசிய மற்றும் மருந்துப்பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. (ம)








நாட்டில் முன்னெடுக்கப்பட்டுவரும் ஊரடங்குச் சட்டத்தினால் பாதிக்கப்பட்டுள்ள வறிய குடும்பங்களிற்கு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தால் 3,500 ரூபா பெறுமதியான வவுச்சர்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அந்த வகையில் வவுனியா மாவட்டத்தில் வசிக்கும் 300 குடும்பங்களுக்கு அண்மையில் இந்த வவுச்சர்கள் வழங்கப்பட்டன. (ம-110)




கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள ஊரடங்கு காரணமாக தொழில் வாய்ப்பை இழந்துள்ள 25 குடும்பங்களுக்கு சிறீலங்கா யுனைட் அமைப்பால் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

# அரச பணியாளர்களிடம் வேதனத்தைக் கோருவது அநீதி

## முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்

யாழ்ப்பாணம், மே.11

**"கொரோனாப் பெருந்தொற்றால் உண்டான அசாதாரண சூழலில், அரச ஊழியர்களின் வேதனத்தை ஒரு மேலதிகச் சுமை போலக் காண்பித்து அதைப் பிடுக்க முயல்வது ஒரு அநீதியான செயல் " என்று தெரிவித்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.**

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

கொரோனா நிவாரண நிதிக்கு அரசாங்கம் ஊழியர்கள் தங்கள் பங்களிப்பாக ஒரு மாத வேதனத்தை வழங்கும் படி ஜனாதிபதியின் செயலாளர் பி.பி.ஜெயசுந்தர கோரிக்கை விடுத்துள்ளார்.

அதில் ஒரு மாத வேதனத்தை வழங்க முடியாதவர்கள் ஒருவார சம்பளத்தை வழங்கும் படியும் கேட்டுகப்பட்டுள்ளது. தற்சமயம் மாதமொன்றுக்கு 100 பில்லியன் ரூபா அரச ஊழியர்களுக்கு வேதனமாக வழங்கப்படுகிறதெனவும். அது இடைக்கால அறிக்கையிலோ, வரவுசெலவுத்திட்ட அறிக்கையிலோ தாக்கத்தை ஏற்படுத்தும் தொகை எனவும் கூறப்படுகிறது.

ஒரு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்படும் போது அரச பணியாளர்களினது வேதனமும் செலவீனத்தில் உள்ளடக்கப்பட்டே அதற்கேற்ற வகையில் வருமான வழிவகைகள் இனம் காணப்படுகின்றன. அப்படியான நிலையில் அதுவும் கொரோனாப் பெருந்தொற்றால் உண்டான அசாதாரண சூழலில், அரச ஊழியர்களின் வேதனத்தை ஒரு மேலதிகச் சுமை போலக் காண்பித்து அதைப் பிடுக்க முயல்வது ஒரு அநீதியான செயல் .


இன்று வெளிநாட்டு உதவியாகவும் உள்நாட்டு நிறுவனங்களிலிருந்தும் அரசாங்கத்துக்கு கொரோனா நிதி வழங்கப்பட்டுள்ளது. இன்னொரு புறம் மசகு எண்ணெயின் விலையில் ஏற்பட்ட பெரும் வீழ்ச்சி காணமாக செலவிடப்படவேண்டிய அந்நியச் செலவணி மிச்சமாகியுள்ளது. இதனை வைத்து அரசுக்கு ஏற்பட்டுள்ள இழப்பை ஈடு செய்ய முடியும். அதனை விடுத்து, போரினாலும் , இடம்பெயர்வுகளாலும், சொல்லொணா இழப்புகளையும், இன்னல்களையும் அனுபவித்து அவற்றிலிருந்து இன்னும் முழுமையாக மீண்டு வரமுடியாது தவிக்கும் அரச ஊழியர்களின் வேதனத்தையும் நிதியுதவி என்ற பேரில் பறிப்பது மனித நேயமற்ற மக்கள் விரோத நடவடிக்கையெனவே நாம் கருதுகிறோம். இது பனையால் விழுந்தவனை மாடேறி மிதிப்பது போன்ற ஒரு அடாவடித்தனமாகும்.

இப்படியான நிலையிலும் கூட சுமைகளையும் சாதாரண மக்கள் தலையில் சுமத்துவது அரசாங்கத்தின் மக்கள் விரோதக் கொள்கையைத் தெளிவாக வெளிப்படுத்துகிறது.

எனவே கொரோனா நிவாரண நிதிக்கு அரச ஊழியர்களிடம் நிதி கோருவதை நிறுத்தி மாற்று வழிகளை இனம் காணும் படி ஜனாதிபதியிடமும் அவரின் ஆலோசகர்களிடமும் வலியுறுத்த விரும்புகிறோம் என்றுள்ளது (அ)

கொரோனாவிலிருந்து பாதுகாக்க

# பொலிஸின் குடும்பங்களுக்கு விழிப்புணர்வு துண்டறிக்கை



கொழும்பு, மே 11

கொரோனா வைரஸ் பரவலிலிருந்து பாதுகாத்துக் கொள்வது எவ்வாறு என்பது தொடர்பில் கொழும்பு பகுதியில் வசித்து வரும் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் குடும்பங்களுக்கு ஆலோசனை மற்றும் துண்டுப் பிரசுரங்கள் வழங்குவதற்கு பொலிஸ் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

பொலிஸ் சிரேஷ்ட உறுப்பினர்களின் குடியிருப்பு தொகுதியில் இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் மேல்மாகாண பிரதி பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோனின் தமையில் இந்த நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட உள்ளன. இதன்போது பொலிஸாரின் உத்தியோபூர்வ இல்லங்களில் வசித்து வருபவர்கள் கொரோனா தொற்றிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு எவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என்பது தொடர்பில் ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதுடன், அது தொடர்பான துண்டுபிரசுரங்களும் கையளிக்கப்படவுள்ளன. என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (ப)

# அரசுக்கு மனிதநேயம் இருக்குமானால் தமிழ்க் கைதிகளை விடுவிக்க வேண்டும்!

## தமிழ் முற்போக்கு கூட்டணி வலியுறுத்து

புலிகளின் மனிதநேயம் குறித்து நற்சான்றிதழ் வழங்கும் இந்த அரசுக்கு துளியளவேனும் மனிதநேயம் இருக்குமானால், குறைந்தபட்சம் தமிழ் அரசியல் கைதிகளையாவது எவ்வித நிபந்தனையுமின்றி முழுமையாக விடுதலை செய்யவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் 'உதயனிடம்' தெரிவித்தார்.

'வடக்கில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கச் சென்றபோது இராணுவம்மீது புலிகள் தாக்குதல் நடத்தவில்லை. புலிகளிடம் காணப்பட்ட அந்த மனிதநேய பண்புகள்கூட இன்றைய எதிர்க்கட்சியினருக்கு இல்லை' என்று கண்டியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கெஹலிய ரம்புக்வெல்ல கருத்து வெளியிட்டிருந்தார்.

இது தொடர்பில் வினவியபோதே வேலுகுமார் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

புலிகளிடம் மனிதநேயம், நற்பண்புகள் எல்லாம் இருந்தன என்பதை முழு உலகமும் என்றோ ஏற்றுக்கொண்டது. போர் முடிவடைந்த பின்னர் சில இராணுவ உயர் அதிகாரிகள் எழுதிய புத்தகங்களில்கூட புலிகளின் ஒழுக்கம் பற்றி உயர்வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், போர் முடிவடைந்து 11 ஆண்டுகள் நெருங்கும்வேளையில்தான் சுடலை ஞானம் பிறந்தாற்போல் ஆளுங்கட்சியினர் புலிப் புராணம் பாடத்தொடங்கியுள்ளனர்.

வழமையாக தேர்தல் காலங்களில் புலிகள் பற்றியும், போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட விதம் பற்றியும் உரையாற்றியே ராஜபக்ஷ தரப்பு வாக்கு வேட்டை நடத்தும். தற்போது திடீரென இப்படியொரு அறிவிப்பு விடுக்கப்பட்டதன் பின்னணி என்னவென புரியவில்லை.

எது எப்படியிருந்த போதிலும் மனிதநேயம், நற்பண்பு ஆகியன தொடர்பில் கதைப்பதற்கு முன்னர் அவை தமக்கு இருக்கின்றனவா என ஆளுந்தரப்பு தமது மனசாட்சியிடம் கேட்டுதெரிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இருக்குமானால் குறைந்தபட்சம் தமிழ் அரசியல் கைதிகளையாவது பொது மன்னிப்பின்கீழ் விடுதலை செய்யவேண்டும். இதற்கான கோரிக்கையை ஆளுந்தரப்பு ஜனாதிபதியிடம் விடுக்கலாம். அதேபோல் காணாமல்ஆக்கப்பட்ட உறவினர்களின் கண்ணீரை துடைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவற்றை அரசு செய்யுமானால் துளி அளவேனும் மனிதநேயம் உள்ளது என்பதை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். அவ்வாறு இல்லாமல் மனிதநேயம் பற்றி வெறுமனே பேசுவதென்பது சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பான செயலாகும்.

அதேவேளை, ஜனநாயகத்துக்கு சமாதிகட்டி சர்வாதிகார ஆட்சியை நடத்துவதற்கே ராஜபக்ச தரப்பு முயற்சிக்கின்றது.

இதன் காரணமாகவே நெருக்கடியான சூழ்நிலையில்கூட நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கு அது மறுக்கின்றது. இவ்வாறு அதிஉயர் சபையைக்கூட்டாது, அலரிமாளிகையில் கூட்டம் நடத்தி என்ன பயன் உள்ளது? அதனாலேயே கூட்டத்தை புறக்கணித்தோம். மனிதநேயம் குறித்தும், நற்பண்புகள் பற்றியும் எதிரணிக்கு பாடமெடுப்பதற்கு ஆளுங்கட்சிக்கு எவ்வித அருகதையும் கிடையாது - என்றார். (ஏ.5.44)

**Extension of obtaining and submission of Bidding Documents**
**Provision of Cleaning, Janitorial and Maintenance Services for the University of Jaffna – 2020/2021**

In response to the above advertisement appeared in the Uthayan Daily News dated on 01.03.2020.
It is hereby notified that the date for the obtaining the bidding documents is extended up to 14th May 2020 and the submission of the completed Bidding document is extended up to 22nd May 2020.
Other terms and conditions in the previous advertisement will remain unchanged.
**Chairman**
Procurement Committee
University of Jaffna,
Thirunelvely, Jaffna.

**வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிழலும்**



கடந்த (10.04.2020) வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர்
**அமரர்**
**கணபதிப்பிள்ளை கந்தசாமி**
**(இளைப்பாறிய ஆசிரியர்)**

அவர்களது மரணச் சடங்கில் கலந்துகொண்டவர்கள், எமது இல்லம் வருகை தந்து ஆறுதல் கூறியவர்கள், தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தவர்கள் அனைவருக்கும் குடும்பத்தின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நேற்று (10.05.2020) ஞாயிறு எமது இல்லத்தில் நடைபெற்றது. இன்று (11.05.2020) திங்கட்கிழமை மு.ப 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

ஆலடி வைரவர் வீதி,
பன்னாலை, சுழிபுரம்.
குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்கள்



திருமதி
## மார்க்கண்டு சரஸ்வதி

யாழ்.பெரியமாவடி சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மார்க்கண்டு சரஸ்வதி நேற்று (10.05.2020) ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும். செல்வமலர். மகேந்திரன் (பிரான்ஸ்) ஜெயமலர் (சுவிஸ்) ரங்கநாதன் (பெல்ஜியம்) ஆகியோரின் அன்புத் தாயாரும். நடராசா. கீதா. குகதாஸ். விஜிதா ஆகியோரின் அன்பு மாமியாரும். நதீபன். சுகந்தினி. சுஜித்தா. பிரதீபன். மகிந்தா. பவித்திரா. தர்சன். தர்சிகா. அபிநாஸ். அமிர்தா ஆகியோரின் அன்பு பேர்த்தியும். வைஸ்ணவி. பிரணிதா. பிரவீன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**

---

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01.06.1927 | 07.05.2020 |

திருமதி
## நடராசா செல்லம்மா
(தேயிலை மாமி)

கொக்குவில் சொர்ணவடலியை பிறப்பிடமாகவும். ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா செல்லம்மா (தேயிலை மாமி) கடந்த (07.05.2020) வியாழக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான மதியாபரணம். பூரணம். பாலசிங்கம் மற்றும் மகேஸ்வரி (கிளி) ஆகியோரின் சகோதரியும். சச்சிசானந்தன் (ஜேர்மனி). சோதிமலர் (பெல்ஜியம்). தேவராணி (ஜேர்மனி). தேவானந்தம் (கொழும்பு) ஆகியோரின் அன்பு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள். அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவானந்தம் (மகன்)
T.P:077 211 2837

தகவல்: சகோதரி (கிளி)
கு.மகேஸ்வரி

---



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 09 . 05 . 1930 | 10 . 05 . 2020 |

## மார்க்கண்டு அன்னபூரணம்

இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும். இணுவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு அன்னபூரணம் நேற்று (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற மார்க்கண்டுவின் (ஓய்வுபெற்ற ஆசிரியர்) அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான சின்னையா-சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். சடாச்சரம் (ஓய்வுபெற்ற ஆசிரியர் கொழும்பு கப்புதாவத்தை மகா வித்தியாலயம்). நிர்மலா (ஓய்வுபெற்ற ஆசிரியர். கொழும்பு அல் அமீன் வித்தியாலயம்). கருணாகரன் (உரிமையாளர்- கருணா கடை. இளந்தாரி கோவிலடி. இணுவில்). சுவர்ணமாலா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும். தேவராஜா (ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர். கல்வி திணைக்களம். இரத்மலானை). ஸ்ரீரஞ்சினி. சிவகனநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும். அர்ஜின் (IBM- பம்பலப்பிட்டி). கம்சிகா (லண்டன்). தர்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். காலஞ்சென்றவர்களான செல்லத்துரை. கந்தசாமி (தமிழ்வேள்-கொழும்பு தமிழ்சங்கம்) மகேஸ்வரி. இராஜேஸ்வரி ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட் கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இணுவில் மேற்கு,**
**இணுவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

# பணியாளர் தேவை

இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலியில் இயங்கும்
பல்பொருள் அங்காடிக்கு பெண்
பணியாளர்கள் தேவை

**கீர்த்தனா பூட்சிட்டி**
இல.29, இராமலிங்கம் வீதி,
திருநெல்வேலி.

தொடர்பு: **077 335 3644**

---

# ஈர விழிகளுடன் ஆறாம் ஆண்டு

## கண்ணகைப்பிள்ளை மயில்வாகனம்



தோற்றம் 13.10.1924 — மறைவு 19.04.2014

திதி:- சித்திரைமாத சங்கடஹர சதுர்த்தி
(11.05.2020)

அன்புத் தெய்வமே,
ஆண்டுகள் ஆறு போனது அம்மா,
எங்களுடன் வாழ்ந்த
அழகிய நினைவுகளும் தங்கள் அன்பும்
எம்மை வழிநடத்திச் செல்லும்
தங்களை நேரில் காண இயலாது
இருப்பினும் நீங்கள்
எப்போதும் எம்முடனே வாழ்கிறீர்கள்

**மகன் குடும்பத்தினர்.**

**இல.140, பரமேஸ்வராச் சந்தி,**
**திருநெல்வேலி.**

---

# மரண அறிவித்தல்கள்

## துரையப்பா தணிகலாசம் (கற்கண்டு)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 27.04.1939 | 10.05.2020 |



தாவடியைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு முதலி கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட துரையப்பா தணிகலாசம் நேற்று (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரையப்பா-கனகம்மா தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான நாகப்பு-செல்லம்மா தம்பதியரின் மூத்த மருமகனும், பரமேஸ்வரியின் அன்பு கணவரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**முதலி கோவிலடி,**
**கொக்குவில் மேற்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
**077 370 9317**

---

திருமதி
## ஞானேஸ்வரி மகாலிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 12.05.1937 | 07.05.2020 |

நல்லூரைப் பிறப்பிடமாகவும், இருபாலை வி.எச். லேனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஞானேஸ்வரி மகாலிங்கம் கடந்த (07.05.2020) வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு கந்தையா தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்ற செல்லத்துரை மகாலிங்கத்தின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்றவர்களான க.முத்துக்குமாரசுவாமி, க.பாலசுப்பிரமணியம் மற்றும் க.இரவீந்திரகுமாரன் (முன்னாள் பொறியியலாளர் - யாழ். மாநகர சபை), சிவயோகேஸ்வரி ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்றவர்களான எஸ்.கனகம்மா (கனடா), பி.யோகேஸ்வரி, மற்றும் எஸ்.பரமேஸ்வரி எஸ்.பாலசண்முகநாதன் (யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க உள்ளக முன்னாள் கணக்காய்வாளர்), எம்.கமலவேணி (ஊரெழு), பி.அம்பிகைமலர் (கனடா), ஆர்.சுசிலா (கோண்டாவில்) ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான எம்.பாபு, எம்.கீதா மற்றும் பி.ஆனந்தரூபி, பி.சுபாகரன் (கனடா), பி.கருணாகரன் (லண்டன்), க.சகிலா (இலங்கை வங்கி - அச்சுவேலி), ஆர்.நிசாந்தன், ஆர்.ஜங்கரன் (ஓமான்), ஆர்.சங்கரன் (கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தொழில்நுட்ப உத்தியோகத்தர்), ரி.கணேஸ்வரன் (தொழிற்துறைத் திணைக் களம்), என்.கல்யாணி (மருத்துவர் - யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனை), ஐ.பவித்திரா (மருத்துவபீடம் - இறுதியாண்டு) ஆகியோரின் மாமியும், கே.யோகித், கே.யதுசா, கே.யனோசா, என்.அத்விக், என்.ஆரோகனா ஆகியோரின் மாமிப் பாட்டியும், காலஞ்சென்றவர்களான ஆர்.மகேஸ்வரன், ஆர்.இரகுநாதன், ஆர்.சண்முகநாதன், எஸ்.இலங்ரத்தினம் மற்றும் எஸ்.மயூரன் (கொழும்பு), ஏ.பத்மாவதி (கொக்குவில்) ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும், காலஞ்சென்றவர்களான கே.சபாபதிப்பிள்ளை, கே.முருகேசபிள்ளை, கே.சின்னத்தம்பி, ஆர்.அன்னம்மா, சின்னப்பு சிதம்பரம் ஆகியோரின் பெறாமகளும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்று, பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஆகியோர் ஏற்றுக் கொள்ளவும்.

**343, பருத்தித்துறை வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்,**

**தகவல்:**
**க.இரவீந்திரகுமாரன்**
**(சகோதரர்)**

---

# கொரோனாவிலிருந்து காக்க மக்கள் ஒத்துழைப்பு தேவை!

*மன். பிரதேச செயலர் வேண்டுகோள்*

கொரோனா வைரஸ் தாக்கத்திலிருந்து காப்பாற்றப்பட்ட சூழலை தொடர்ந்தும் பாதுகாப்பதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்ல மக்கள் ஒத்துழைக்க வேண்டும் என்று மன்னார் பிரதேச செயலாளர் எம்.பிரதீப் தெரிவித்தார்.

செஞ்சிலுவைச்சங்கத்தின் மன்னார் கிளையின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்டத்தில் கொரோனா தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட வறுமைக் கோட்டுக்குட்பட்ட மக்களுக்கு பொருள்களை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை காலை தலைமன்னாரில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

நாட்டில் கொரோனா வைரஸ் தாக்கம் ஏற்பட்டு இரண்டு மாதங்களைக் கடக்கின்றோம். நாங்கள் அனைவரும் வாழ்க்கையில் சந்திக்காத புதுவித அனுபவம். பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்துள்ளோம். எமது நாட்டில் கொண்டு வரப்பட்ட விசேட சட்டதிட்டங்களுக்கு அனைவரும் மதிப்பளித்து சமூக இடைவெளிகளைக் கடைப்பிடித்து வீடுகளில் இருந்ததால் நாங்கள் இன்று இந்த இடத்தில் இருந்து கதைக்கக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஏனைய அபிவிருத்தி அடைந்த வல்லரசு நாடுகள் இன்று ஆட்டம் கண்டுள்ள நிலைமை இருக்கின்றது. கொரோனா முழுமையாகப் பரவி எதுவும் செய்யமுடியாத நிலையை ஏற்படுத்தி உள்ளது. எமது நாட்டில் இவ்வாறான சூழ்நிலை இருக்கின்றது. நாங்கள் பல்வேறு துன்பங்களைச் சந்தித்துள்ளோம். பொருளாதாரச் சரிவு, பட்டினி போன்ற பல்வேறு பிரச்சினைகளைச் சந்தித்துள்ளோம். இவ்வாறு நாங்கள் பல்வேறு பிரச்சினைகளை சந்தித்து காப்பாற்றப்பட்ட இந்தச் சூழலை தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கு நீங்கள் அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திங்கள் முதல் வழமை நிலைக்கு மாவட்டம் கொண்டு வரப்படுகின்றது. உங்களுடைய தேவைகளுக்கு மாத்திரம் வெளியில் செல்லுங்கள்-என்றார். (ப-56)

---

# மூன்றாம் கட்ட உதவியை அனுப்பி வைத்தது சீனா


கொரோனா வைரஸ் பரவலுக்கு எதிரான போராட்டத்துக்கு உதவும் வகையில் சீன அரசாங்கத்தால் இலங்கைக்கு வழங்கப்படும் உதவிப் பொருள்களின் மூன்றாம் கட்ட பொருள்கள் கடந்த வெள்ளிக் கிழமை மாலை கொழும்பை வந்தடைந்தன.

சீனாவின் ஷங்காய் நகரிலிருந்து கிழக்கு சீன எயார்லைன்ஸ் விமான சேவை ஊடாக இப்பொருள்கள் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தன.

அவற்றில் கொரோனா வைரஸ் பரிசோதனை உபகரணங்கள் 30 ஆயிரம் , ஒரு முறை பயன்படுத்திய பின்னர் அகற்றக்கூடிய 12ஆயிரத்து 330 தற்பாதுகாப்பு அங்கிகள் என்பன அடங்குகின்றன. இம்மூன்றாம் கட்ட உதவியின் அடுத்த தொகுதி பொருள்களான 17ஆயிரம் 670 தற்பாதுகாப்பு அங்கிகள், 30ஆயிரம் கே.என் 95 முகக் கவசங்கள், 30ஆயிரம் தற்பாது காப்புக் கண்ணாடிகள், மற்றும் 6 லட்சம் சத்திரசிகிச்சை முகக்கவசங்கள் என்பன வெகுவிரைவில் விமானம் மூலம் வந்து சேரும் என சீனத்தூதரகம் அறிவித்துள்ளது. (ப)

## மரண அறிவித்தல்

தோற்றம்
11 . 02 . 1948



உதிர்வு
10 . 05 . 2020

### கனகசபை பாலசுந்தரமூர்த்தி
**(சோதிடர் சின்னாண்டி)**

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கனக சபை பாலசுந்தரமூர்த்தி நேற்று (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், ஏகாம்பரவல்லியின் (இராசாத்தி) அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான இராசதுரை-அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், அரவிந்தன், சுமதி, முரளிதரன், பாலரோகினி ஆகியோரின் பாசமிகு தந்தையும், பாதுசா, கஜேந்திரன், லிவன்யா, விமேஸ் ஆகியோரின் மாமனாரும், அக்ஷயன், அபிநயா, அட்சரன், கரோலின், ரெமி, ரோமா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 11.00 மணியளவில் பூதவுடல் இணுவில் காரைகால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**சிவகாமி அம்மன் கோவிலடி,**
**இணுவில் கிழக்கு, இணுவில்.**
**077 8503 176**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு
24 . 02 . 1938



உதிர்வு
07 . 05 . 2020

### இராசேந்திரம் இம்மானுவேல் (ஜெயம்)
**(புகையிரத ஓய்வூதியர்)**

நாவற்குழியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரம் இம்மானுவேல் கடந்த (07.05.2020) வியாழக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம்-எலிசபேத்தம்மா தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும் மேரி யூப்பிறேசியா பூமணியின் அன்புக் கணவரும், மரிய ஜெயக்குமார், மரிய ஜெயசீலன், மரிய சுகந்தி (உளநலம் ஆதார வைத்தியசாலை சாவகச்சேரி), மரிய சுவர்ணா (ஆசிரியர், யா/நாவற்குழி ம.வி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், வேஜினி, சுவிற்றி, சென் செபஸ்ரியன் (C.T.B நடத்துனர்), ஏபிரகாம் பிரபாத் ஆகியோரின் பிரியமுள்ள மாமனாரும், செலஸ்ரின், ஸ்ரெபான், ஜெவிஸ்ரன், ஜெர்லின், மெர்லின் ஆகியோரின் ஆசைமிகு பேரனும், காலஞ்சென்ற மேரி மாக்கிறேற், செல்வராக்கினி (ஆனைக்கோட்டை), சிசிலியா (திருகோணமலை), மரிய ரஞ்சிதம் (இத்தாலி), காலஞ்சென்ற மேரி அஞ்சலீனா, ஞானசோதி (நாவற்குழி), அருள்நேசன் (லண்டன்), குணசீலன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை இன்று (11.05.2020) திங்கட்கிழமை பி.ப 2.00 மணியளவில் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்று, பின்னர் பூதவுடல் நாவற்குழி அந்தோனியார் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கேரதீவு வீதி, நாவற்குழி.**
**மகன் -076 678 8318**
**மகள் -077 154 7092**
**மருமகன் -077 491 1355**

தகவல்:
**மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்

பிறப்பு
10 . 04 . 1931



இறப்பு
10 . 05 . 2020

### கந்தையா சிவராசா

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையை பிறப்பிடமாகவும் தாவடி வடக்கினை வதிவிட மாகவும் கொண்ட கந்தையா சிவராசா நேற்று (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-நாகம்மா தம்பதியரின் புத்திரனும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-பொன்னம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சற்குணராசன் மற்றும் தற்பராதேவி (பிரான்ஸ்), சிறீதரன் (டென்மார்க்), ஜெகதீஸ்வரன் (பிரித்தானியா), ரவிச்சந்திரன் (பிரித்தானியா), உதயகுமார் (பிரான்ஸ்), சிவகுமாரன் (பிரான்ஸ்), சுரபாஸ்கரன் (ஆசிரியர்-யாழ்/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பராசக்தி மற்றும் அரசரட்ணம், இராஜரட்ணம் ஆகியோரின் சகோதரனும், ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), உமா (டென்மார்க்), ஜெகதீஸ்வரி (பிரித் தானியா), லலிதா (பிரித்தானியா), வத்சலா (பிரான்ஸ்), பிரசாந்தி (ஆசிரியை-யாழ்/மானிப்பாய் மெமோரியல் ஆங்கிலப் பாடசாலை) ஆகியோரின் அருமை மாமனாரும், காலஞ்சென்றவர்களான சுந்தரம், தங்கரத்தினம் மற்றும் பாலசுப்ர மணியம், காலஞ்சென்ற திருஞானசம்பந்தர் மற்றும் சிவபாதசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும், மெளனிகா, பிரதிகா, கபில்நாத், யசோநாத், கஜோநாத், ஜனேஷ், மதுரா, தனுநாத், தனுசன், சுவாதீகா, அகரன், அரன், அகானா, அஷ்வின், அவ்யா ஆகியோரின் ஆசைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சி.சுரபாஸ்கரன்**
**75/8, வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு, (துரை வீதி)**
**கொக்குவில், யாழ்ப்பாணம்.**
**077 5844087 / 021 205 3013**

தகவல்:
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 05 . 1953



மறைவு
09 . 05 . 2020

### கதிரவேலு ஸ்ரீநாதன் (நாதன்)

வேலணை மேற்கு சிற்பனையைப் பிறப்பிடமாகவும் வேலணை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஸ்ரீநாதன் கடந்த (09.05.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு சொர்ணம்மா தம்பதியரின் புதல்வரும், ஞானசிவம் காமாட்சி தம்பதியரின் அன்பு மருமகனும், ஞானதீபத்தின் அன்புக் கணவரும், சசிதர் (கனடா), ஸ்ரீதரன் (கொழும்பு), சர்மிளா (கனடா), சுதாகர் (ஜேர்மனி), சிவதாஸ் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தந்தையும், தவரத்தினம், தனவதி, செல்வராணி, செல்வராசா, தவமணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுஜாதா (கனடா), காயத்திரி (கொழும்பு), காந்தரூபன் (கனடா), சிந்துஜா (ஜேர்மனி), தர்சிகா (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஷாயினி, ஷாளினி, ஷாய்னா, ஐஸ்னவிகா, காவியா, ஸ்ரீநியா, கனிசா, கவிசன், ஆருசா ஆகியோரின் அன்புப் பேரனும் கோபாலபிள்ளை, குலசேகரம்பிள்ளை, கிஸ்ண மூர்த்தி, பத்மாவதி, ராஜசிங்கம், ஞானசேகரம், சிவஞானசுந்தரம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று வேலணை அம்பலவி மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தொடர்பு: 0777 140 359,**
**076 533 0309 077 390 4124**

தகவல்:
**குடும்பத்தினர்.**

# மரண அறிவித்தல்



தோற்றம்
12 . 11 . 1962

மறைவு
06 . 05 . 2020

திருமதி

## சகுந்தலாதேவி (நீலா) திருநாவுக்கரசு

ஆவரங்காலைப் பிறப்பிடமாகவும், அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சகுந்தலாதேவி (நீலா) திருநாவுக்கரசு கடந்த (06.05.2020) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பஞ்சாச்சரம் அன்னக்கிளி (சரசு) தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சின்னப்பா-ரத்தினம் தம்பதியரின் அன்பு மருமகளும், திருநாவுக்கரசின் (வலி.கிழக்கு பிரதேசசபை உறுப்பினரும், முன்னாள் வலி. கிழக்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்க காசாளரும்) பாசமிகு மனைவியும், அயந்தனின் (London) அன்புத் தாயாரும், சிறீதேவன் (Canada), வசந்தாதேவி (ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நந்தகோபாலின் (Swiss) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (07.05.2020) வியாழக்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நெடுங்கேணி வளவு,**
**அச்செழு, நீர்வேலி.**

தகவல்:
**சி.திருநாவுக்கரசு**
**(கணவர்)**

# மரண அறிவித்தல்



## திருமதி சறோஜினிதேவி இராஜதுரை
## (சறோஜினி)

யாழ். திருநெல்வேலி கிழக்கு, முடமாவடியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி சறோஜினிதேவி இராஜதுரை கடந்த (09.05.2020) சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் பவளம் தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான சிவசம்பு செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், இராஜதுரையின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்-கொக்குவில்) அன்பு மனைவியும், அரவிந்தன் (விந்தன்-கனடா), வாசுகி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ராதிகா (கனடா), சிவரூபன் (ரூபன்-கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் சண்முகலிங்கம் (பிரித்தானியா), பரமேஸ்வரி (பிரித்தானியா), காலஞ்சென்ற தருமராசா மற்றும் கனகராசா (கனடா), காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், அருணன் (கனடா), அஸ்வினி (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.05.2020) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**இல.165, இராமலிங்கம் வீதி,**
**திருநெல்வேலி கிழக்கு,**
**முடமாவடி.**

தகவல்:
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்

பூமியின் அழைப்பில்
21.11.1934

ஆண்டவன் அழைப்பில்
09.05.2020



## முத்துவேலு சண்முகநாதன்
## (தவம்) (J.P)

முன்னாள் writ உடையார் வட்டுக்கோட்டை, முன்னாள் சமாதான சபை உறுப்பினரும், முன்னாள் வட்டுக்கோட்டை தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்க ஸ்தாபகரும், தலைவரும் வட்டுத்தென்மேற்கு (J/166) வட்டு இளைஞர் அபிவிருத்திக் கழக ச.ச. நிலைய பெருந்தலைவர் (போஷகர்), முன்னாள் வட்டுத் தென்மேற்கு விவசாய சம்மேளனத் தலைவரும், பிரபல சமூக சேவையாளரும்

வலிமேற்கு வட்டுக்கோட்டை தென்மேற்கு அற்கின்சன் வீதி, உணனை விழானை வளவை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முத்துவேலு சண்முகநாதன் கடந்த (09.05.2020) சனிக்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருணாசலம் முத்துவேலு (Clerk of Wortes Malaysia) நீலாய தாஷசி அம்மா தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான ஆ.நகுலாம்பிகை, நா.ஞானாம்பிகை, செல்வி கனகாம்பிகை ந.கமலாம்பிகை, அ.இரத்தினாம்பிகை ஆகியோரின் அன்புத் தம்பியும், காலஞ்சென்றவர்களான பூ.இராமநாதன், பூ. பத்மநாதன், பூ.ஜெயநாதன், பூ.வைத்தியநாதன், டாக்டர் பூ.கைலாயநாதன் மற்றும் டாக்டர் திருமதி த.மனோரஞ்சிதம், அமரர் பூ.குணரத்தினம் ஆகியோரின் பாசமிகு ஒன்றுவிட்ட சகோதரனும், காலஞ்சென்றவர்களான தா.சிவகுருநாதன், இரட்ணாவதி, தா. இராசா (பெருமைனார்) இரட்ணாவதி, தா.இராசாமுத்தம்மா, தா நவரட்ணராசா, வள்ளியாச்சி ஆகியோரின் அன்பு மருமகனும், டாக்டர் கமலாயதாட்ஷி அம்மாவின் பெறா மகனும், இராஜலட்சுமியின் (இராசாத்தி) பாசமிகு கணவரும், கணேசகுமார் (France) சரவணபவன் (Canada), ஜெயபவன் கௌரி (U.K), சிவநாதன் பவானி (U.K) ஸ்ரீபரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பாவும், சயந்தி ஜெயபவன், சிவநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரசன்னா சிவகரன், பிரீத்தி, சூர்யா, மதுசன், சுவேத்தா, திலக்சன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (10.05.2020) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் வட்டுக்கோட்டை கொத்தத்துறை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மனைவி, மக்கள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**அற்கின்சன் வீதி, வட்டுக்கோட்டை.**

**076 223 3096**

# கோலியைப் புகழ்வோர் அசாமையும் பாருங்கள்

## சப்பலுக்கு மூடி பதிலடி



இஸ்லாமபாத், மே 11
கோலியை உலகின் சிறந்த வீரர் என்று கொண்டாடுபவர்கள் பாபர் அசாமையும் கொஞ்சம் திரும்பிப் பாருங்கள் என்று தெரிவித்துள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் சகலதுறை வீரர் மூடி. கோலி குறித்து இயன் சப்பல் தெரிவித்த கருத்துக்களுக்குப் பதிலடியாகவும் மூடியின் கருத்துப் பார்க்கப்படுகின்றது.
இது தொடர்பில் மூடி மேலும் தெரிவித்ததாவது: 'விராட் கோலி எப்படி சிறந்த பேட்ஸ்மென் என்பதை நாம் பேசி வருகிறோம். விராட் கோலி பார்ப்பதற்கு நன்றாக ஆடுகிறார் என்றால் பாபர் அசாமையும் பாருங்கள்.
அடுத்த 5 அல்லது 10 ஆண்டுகளில் உலகின் ஆகச் சிறந்த வீரர்களில் ஒருவராக அசாம் இருப்பார்' என்றார். (ம)



# 3 வடிவங்களிலும் சிறந்தவர் கோலி!


## இயன் சப்பல் புகழாரம்

சிட்னி, மே 11
இந்திய அணியின் தலைவரான விராட் கோலி, மூன்று வித வடிவங்களிலும் உலகின் சிறந்த வீரராக உள்ளார். அவருக்கு நிகரான வீரர் என்று எவரும் இல்லை. ஆனால் சிமித் மற்றும் வில்லியம்சன் கோலிக்கு சிறந்த போட்டியாளர்கள் என்று தெரிவித்தார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரான இயன் சப்பல்.
ஆஸ்திரேலியா - இந்தியா டெஸ்ட் தொடர் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே சப்பல் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
இந்தியா-ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர்நோக்கி உள்ளேன். இந்த தொடர் விறுவிறுப்பும், சுவாரஸ்யமும் நிறைந்ததாக இருக்கும். கடந்த முறை இந்திய அணி தொடரை வென்றதால் நம்பிக்கையுடன் வருவார்கள். ஆனால் சிமித் மற்றும் வோர்னர் ஆஸ்திரேலிய அணிக்கு திரும்பி இருப்பதால் இந்த முறை இந்தியாவுக்கு கடினமாக இருக்கும். இவர்கள் இருவரையும் விரைவில் வீழ்த்தினால் இந்தியா வெற்றி பெறலாம். இல்லாவிட்டால் ஆஸ்திரேலியா வெற்றிபெறும்.
மூன்று வடிவிலான போட்டிகளிலும் இந்திய அணியின் தலைவர் விராட் கோலி ரன் குவித்து வரும் விதம் வியப்பூட்டுகிறது. தற்போது உலகின் சிறந்த வீரர் அவர்தான் - என்றார். (ம)

# மங்கூஸுக்கு தடைபோட்ட டோனி

## ஹைடன் ருசிகரம்

புதுடெல்லி, மே 11
மத்யூ ஹெய்டன் ஏற்கெனவே ஆள் வாட்டசாட்டமாக வயதுக்கு மீறிய உடல் கட்டமைப்புக் கொண்டவர், இதில் அவர் மங்கூஸ் ரக துடுப்பு மட்டையைப் பயன்படுத்தினால் எப்படி இருக்கும்? இதைக் கண்டு டோனியே அச்சப்பட்டு ஹெய்டனிடம் அதைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறியதை ஹெய்டன் தற்போது தெரிவித்துள்ளார்.
சிஎஸ்கே அணியின் தொடக்க வீரராக ஹெய்டன் விளையாடினார். 2010ஆம் ஆண்டு



சென்னை சூப்பர் கிங்ஸ் ஐபிஎல் சம்பியன் ஆனது. அப்போது கைபிடி நீளமாகவும் அடிப்பகுதி சற்றே அகலமாகவும் உள்ள மங்கூஸ் துடுப்புமட்டையை அவர் பயன்படுத்தினார்.
அந்த மட்டையில் பந்து பட்டால் சாதாரண மட்டையை விட 20 அடி கூடுதல் தூரம் பந்து பயணிக்கும். டெல்லி டேர்டெவில்ஸ் அணிக்கு எதிராக இந்த மட்டையைப் பயன்படுத்தி ஹெய்டன் 43 பந்துகளில் 93 ஓட்டங்கள் விளாசினார். அப்போது அந்த மட்டை பெரும் சர்ச்சைகளைக் கிளப்பியது.
இந்நிலையில் டோனி அப்போது கூறியதை நினைவு கூர்ந்த மேத்யூ ஹெய்டன், 'இந்த மட்டையை நீங்கள் இனி பயன்படுத்தாமல் இருக்க உங்களுக்கு வாழ்க்கையில் தேவைப்படும் எதையும் நான் கொடுக்கத் தயாராக இருக்கிறேன்' என்று டோனி தெரிவித்தார் என்று தெரிவித்துள்ளார். (ம)



# இந்தியா, ஆஸி. இணைந்தால் அலெக்ஸ் ஹரியின் கற்பனை!

சிட்னி, மே 11
கொரோனா வைரஸ் பரவலினால் விளையாட்டுப் போட்டிகள் மீண்டும் எப்போது தொடங்கும் என்பதே புதிராக இருந்து வரும் நிலையில் வீரர்கள் தங்களுக்கேயுரிய விதங்களில் பொழுதைக் கழித்து வருகின்றனர். ஆஸ்திரேலிய அணியின் இலக்குக் காப்பாளரும், அதிரடி வீரருமான ஹரி தற்போதைய இந்தியா-ஆஸ்திரேலியா வீரர்களைக் கொண்ட இணைந்த ரி20 அணியை அறிவித்துள்ளார்.
ஹரியின் அணி வருமாறு: ஷிகர் தவண், டேவிட் வோர்ணர், சிமித், விராட் கோலி, ரிஷப் பன்ட், அலெக்ஸ் கேரி, ரவீந்திர ஜடேஜா, மிச்செல் ஸ்ராக், கமின்ஸ், பும்ரா, ஷாம்பா. (ம)




# ஐந்து மாற்று வீரர்களுக்கு சம்மதம் தெரிவித்தது பிபா

பேர்லின், மே 11
வீரர்கள் தொடர்ச்சியாக ஏராளமான போட்டிகளில் விளையாட இருப்பதால் ஐந்து மாற்று வீரர்களுக்கு கால்பந்து கூட்டமைப்பு ஒப்புதல் அளித்துள் ளது.
கொரோனா காரணமாக கால்பந்து, கிரிக்கெட், ரென்னிஸ் உள்ளிட்ட அனைத்து விளையாட்டுப் போட்டிகளும் முடங்கிப் போயுள்ளன. தற்போது மீண்டும் போட்டிகள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.
இந்த நிலையில், கொரோனா காரணமாக முடங்கிய பல்வேறு கால்பந்தாட்டங்கள் விரைவில் தொடங்க உள்ளன.
அடுத்தடுத்து போட்டிகள் நடப்பதால் வீரர்களுக்கு கூடுதல் நெருக்கடி ஏற்படும். இதனால் வீரர்களுக்கு காயம் ஏற்படுவதை தவிர்க்கும் வகையில் தற்காலிக மாற்றம் செய்ய சர்வதேச கால்பந்து கூட்டமைப்பு ஆலோசித்தது.
இதன்படி, இனிமேல் ஒவ்வொரு போட்டியிலும் ஐந்து மாற்று வீரர்களுக்கு அனுமதி தரப்படும். இந்த மாற்றங்கள் 2021ஆம் ஆண்டு முடியும் வரையில் நடைமுறையில் இருக்கும் என்றுள்ளது. (ம)

NORTHERN BLOCKS & MATERIAL SUPPLIERS
• Cement Blocks • Sand • Metals • Pillers
• சீமெந்துக்கற்கள் • தூண்கள் • மணல்
• கண்டகற்கள் • சல்லி
076 760 3066 Jaffna Kilinochchi
northerncn@gmail.com



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 11.05.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.